270

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

★

## இந்த இதழில்

சரக்கு சப்ளை - விலை அவசரச் சட்டம்

சென்னை கட்டாய நிலச்சாகுபடி உத்தரவு

வனஸ்பதி கண்ட்ரோல் உத்தரவுகள்

அவசரச் சட்டத்தின் கீழ் சர்க்கார் நடவடிக்கைகள்

வழக்கும் — தீர்ப்பும்

கேள்வி — பதில்

மற்ற கண்ட்ரோல் உத்தரவுகள் சர்க்கார் அறிக்கைகள்

★

MADRAS

270
4-50

1703

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE "VAKIL" ~ அக்டோபர்-1950 ~ 4 அணா

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி)

**கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்**
**கொடுப்பதில் நிகரற்ற**


**சந்தனாதித்தைலம் அரைக்கீரைவிதைத்தைலம்**
**கோகுல் கூந்தல் தைலம்**

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

*For Madras*
SURAJ AGENCIES
MADRAS

*For Coimbatore, Palghat & Nilgiris*
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.


விரைவில் வெளிவருகிறது
லட்சக்கணக்கான
மக்களை பரவசத்தில்
ஆழ்த்திய வடுவூரார்
நாவல்
திகம்பர
சாமியார்
வல்லவனுக்கு வல்லவன்
வையகத்தில் உண்டு என்ற
மகோன்னத தத்துவத்தை
போதிக்கும்...
மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர
சாமியார்
டைரக்ஷன்-
டி.ஆர்.சுந்தரம்
BAKTHA

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

## மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ

தெப்பக்குளம் P. O., திருச்சி.

## "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்தியேகம்


ஆயுர்வேத வைத்தியர்

**T. V. ஜெயராம சாஸ்திரிகள்,**

வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

## பிலிப்ஸ் ரேடியோ செட்

5 வால்வு எல்லா ஸ்டேஷன்களும் கேட்கக்கூடிய செட் விலை ரூ. 240/-



*Authorised Dealers:—*

### மாடர்ன் ரேடியோஸ்

பெரிய தெரு :: கும்பகோணம்

## "சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K. R. அப்ளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணு 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0.

வி. பி. பி. தனி
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

**சக்தி ஹோம், விருத்தாசலம் P.O. (S.I.)**

## "ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும்

ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38/ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பிவைக்கவும்.

N.B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
கோட்டமருதூர், அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்**

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். சந்தா முடிந்தவுடன் புதிதாய்ச் சந்தா அனுப்பும்போது பழய சந்தா நம்பரைக் கண்டு எழுதவும். சந்தா நம்பர், சந்தாதாரரின் தபால் விலாசத்திற்குமேல் கொடுக்கப்பட்டிருக்கும் எண்தான்.


"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

**ஆசிரியர் கமிட்டி**

ஸ்ரீ T. சம்பத், B. A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B L.,
,, P. சுந்தரேசய்யர், B A B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L. (ஆசிரியர்)


## "வக்கீல்"

## (சந்தா விபரம்)

| | |
|---|---|
| வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு | ரூ. 3—0—0 |
| தனிப் பிரதி ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்


## "வக்கீல்"

## விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் ப்க்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)



# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 அக்டோபர் 1950 இதழ் 10


## பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **குறிப்புகள்** | |
| பணக்குவியல் | 4 |
| விலை நிர்ணயம் | 4 |
| **புதிய சட்டங்கள்** | |
| சுருக்கியும்—வரிசையாயும் | 5 |
| **புதிய சட்டங்கள்** | |
| பொறுக்கியும்—விவரமாயும் சரக்கு விநியோக விலை நிர்ணய அவசரச் சட்டம் | 7 |
| **வழக்கும்-தீர்ப்பும்** | |
| நீதி பரிபாலனம் செய்பவர் எவரும் தம் வழக்கைத் தாமே விசாரணை செய்துகொள்ள முடியாது | 11 |
| "கண்ட்ரோல்" சட்டத்தை மீறுவதில் கெட்ட எண்ணம் ஒன்றுமில்லா விட்டாலும் குற்றம் குற்றம்தான் | 13 |
| ஸ்டாம்பு சட்டத் தீர்ப்பு—லக்ஷ ரூபாய்க்குமேல் மதிப்புள்ள சொத்தை "மதிப்பு ரூ. 3000" என்று செட்டில்மெண்ட் எழுதி அதற்கான ஸ்டாம்பு வாங்கினுல் சரியா? | 14 |
| **கேள்வி-பதில்** | 16 |
| **கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்** | |
| விலை நிர்ணயம்— இதர சர்க்கார் அறிக்கைகள். | 20 |



★ "வக்கீல்" பத்திரிகையில் செய்யும் விளம்பரம் தமிழ் மக்கள் வசிக்கும் இடமெங்கும் பரவும். ★

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 அக்டோபர் 1950 இதழ் 10


18770

# குறிப்புகள்.

## பணக்குவியல்:

விலை வாசிகள் இரண்டு காரணங்களினால் உயரலாம். ஒன்று பண்டங்கள் குறைவாக உற்பத்தி செய்யப்படலாம், அல்லது பொது மக்களிடம் பணப் புழக்கம் மிக அதிகமாக இருக்கலாம். இதனைப் 'பணவீக்கம்' என்று சொல்வது. ஆனால் இப்பொழுது நமது நாட்டில் திடீரென்று ஏற்பட்ட விலை உயர்வுக்கு இவை இரண்டும் காரணமல்ல என்று நிபுணர்கள் சொல்கின்றனர். சர்க்காரும் அப்படியேதான் அபிப்பிராயப்படுகின்றனர். சுயநலக்காரர்களின் நடத்தையாலேயேதான் இப்பொழுது விலை வாசிகள் உயர்ந்தனவென்று சர்க்கார் கருதுகின்றனர்.

ஆனால் இந்தச் சுயநலக்காரர்கள் யார்? அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது? எல்லா வியாபாரிகளுமா பதுக்கல் கள்ளமார்க்கெட் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்? இல்லை; இல்லை! வியாபார சமூகம் என்று சொல்லக் கூடிய பல்லாயிரக்கணக்கான நடுத்தர வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் பொதுமக்களைப் போலவே இந்த விலை உயர்வு நெருக்கடியில் சிக்கிக் கொண்டு தவிக்கின்றவர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை.

பின்பு எப்படி விலைவாசிகள் உயர்ந்தன? யார் பண்டங்களைப் பதுக்கியது? பண்டங்களைத் தேக்கி வைத்து, செயற்கைப் பஞ்சத் தோற்றத்தைத் தாற்காலிகமாக விளைவித்து, அதனால் உயர்ந்த விலையை அடைந்தது யார்?

ஒவ்வொரு ஊரிலும் திடீரென்று சில்லறை நடுத்தர வியாபாரிகளிடமிருந்த பண்டங்களை எல்லாம் விலைகொடுத்து வாங்கித் தேக்கியது யார் யார்? இதற்கு ஒரே பதில்தான் சொல்லமுடியும். 'பணக்குவியல்' உள்ளவர்கள்தான் இதைச்செய்ய முடியும். சாதாரணப் பணக்காரர்கள் கூடச் செய்யமுடியாது. குவிந்த பணத்தை என்ன செய்வது? வட்டிக்குக் கொடுத்தால் பயம். பாங்குகளிலும் சர்க்கார் பத்திரங்களிலும் போட்டால் வரி அதிகாரிகளின் சந்தேகத்தைக் கிளப்பும். ஆகையால் நெருக்கடி சமயங்களில் பண்டங்களை வாங்கி, சற்றுத் தேக்கி விட்டால், பணம் இரண்டு மூன்று மடங்காக சில தினங்களில் பெருகிவிடும். இக்குவியல்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கை உள்ளவர்களிடமே இருந்தாலும் இதுதான் மக்களின் விஷம். இக்குவியல்களைத் தட்டி மட்டப்படுத்த வேண்டியது சர்க்காரின் முதல் கடமையாகும்.

## விலை நிர்ணயம்:

விலை நிர்ணயம் செய்யும் அதிகாரிகள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் ஒன்று இருக்கின்றது. சிற்சில பண்டங்கள் சில இடங்களில் மார்க்கெட்டில் எந்த விலைக்கு அகப்படுகின்றதோ அதைவிட அதிக விலையை நிர்ணயம் செய்தால் உடனே மார்க்கெட் விலையும் அந்த அளவுக்கு உயர்ந்துவிடுகின்றது. இதனால் பொதுமக்களுக்கு ஒன்றும் பயனில்லை. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலைகள் இருந்தால் அங்கங்கே மார்க்கெட்டில் விற்கப்படும் குறைந்த விலையையே ஆதாரமாகக் கொண்டு அதைவிடக் குறைந்த விலையையே நிர்ணயம் செய்தால்தான் பொதுமக்களுக்கு நலம்.

# புதிய சட்டங்கள்

## சுருக்கியும்-வரிசையாகவும்

**1950 ஆம் வருஷத்திய (மத்திய) சட்டங்கள்.**

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாக சொல்லப்பட்டன]

**49 ஆவது (மத்திய) சட்டம் (14-8-1950)** எதிர்பாராச் செலவு நிதிச் சட்டம் (The Contingency Fund of India Act 1950). இச்சட்டத்தால் இந்தியப் பொது நிதியிலிருந்து 15 கோடி ரூபாய் ஒரு தனிக் கணக்கில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. எதிர் பாராத அவசரச் செலவுகள் மட்டில், இந்த நிதியிலிருந்து மத்திய சர்க்காரால் செலவு செய்யப்படும். பிறகு பார்லிமெண்டின் அனுமதி கேட்கப்படும்.

**50 ஆவது (மத்திய) சட்டம் (14-8-1950)** தடுப்புக்காவல் திருத்தச் சட்டம் (Act to amend the Preventive Detention Act 1950) ஜீவாதார உரிமைக்கு முரணை இருக்கிறதென்று சுப்ரீம் கோர்ட்டால் அபிப்ராயப் படப்பட்ட, தடுப்புக் காவல் சட்டத்தின் 14 ஆவது செக்ஷன், இத்திருத்தச் சட்டத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது.

**51 ஆவது (மத்திய) சட்டம் (14-8-1950)** ஜனக்கணக்குத் திருத்தச் சட்டம் (The census (Amendment) Act 1950) 1948 ஆம் வருடத்திய சென்ஸஸ் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

**52 ஆவது (மத்திய) சட்டம் 14-8-1950** அத்தியாவசியப் பொருள் சப்ளை தாற்காலிகத் திருத்தச் சட்டம். (The Essential Supplies-Temporary Powers-Amendment Act 1950) கண்ட்ரோல் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 'அமிதப் பதுக்கலு'க்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. (இச் சட்டம் விவரமாய் "வக்கீல்" 1950 செப்டம்பர் இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.)

**53 ஆவது (மத்திய) சட்டம் (18-8-1950)** கண்டோன்மெண்ட் சட்டத் திருத்தம் (The cantonment Laws—Extension and Amendment—Act 1950.)

**54 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** 1949, 1950 வருஷங்களின் இந்திய நிதிச் சட்டத்தைத் திருத்தும் சட்டம். (The Finance Laws Amendment Act 1950). இச்சட்டத்தின் மூலம் இன்கம் டாக்ஸ் சட்டத்தின் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

**55 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** பாகிஸ்தானிலிருந்து வருவதைக் கட்டுப் படுத்தும் சட்டத்திருத்தம். (The Influx from Pakistan—Control - Amendment Act 1950)

**56 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** குறைந்தபட்ச சம்பள நிர்ணயச் சட்டத்திருத்தம். (The Minimum Wages—Amendment Act - 1950) இதன்படி சில தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சட்டத் தேதியிலிருந்து இரண்டு வருஷங்களுக்குள் மாகாண சர்க்கார் குறைந்த பட்ச சம்பள நிர்ணயம் செய்யவேண்டியதென்று இருந்ததை 'மூன்று வருஷங்களுக்குள்' நிர்ணயம் செய்யவேண்டுமென்று திருத்தப் பட்டிருக்கிறது.

**57 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** கடற்படை சில்லறை விஷயங்களைப் பற்றிய சட்டம் (The Naval Forces—Miscellaneous Provisions—Act 1950) இச்சட்டப்படி, மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப் பட்ட இலாகா தவிர, கடற்படையின் எந்த உத்தியோகத்திலும் ஸ்திரீகள் நியமிக்கப்பட மாட்டார்கள். மேலும் கடற்படையைச் சேர்ந்த எவரும் தொழிற் சங்கங்கள் முதலியவற்றில் சேருவதைப்பற்றி மத்திய சர்க்கார் விதிகள் செய்யலாம்.

**58 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** பல் வைத்தியர்கள் சட்டத் திருத்தம் (The Dentists-Amendment-Act 1950) 1948 ஆம் வருடத்திய பல் வைத்தியர்

கள் சட்டப்படி அதற்கான யோக்கியதாம்ச முள்ள பல் வைத்தியர்கள் அச்சட்டப்படி பதிவுசெய்துகொள்ள வேண்டும். அச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 29-3-1948க்கு இரண்டு வருடத்திற்குப் பிறகு, பதிவுசெய்து கொள்ளாதவர்கள் பல் வைத்தியம் செய்வது குற்றம். இத்திருத்தச் சட்டத்தால் 'இரண்டு வருஷம்' என்பது மூன்று வருடமாக திருத்தப் பட்டிருக்கிறது. அதாவது 29-3-1951க்குப் பிறகு இச்சட்டப்படி பதிவு செய்து கொள்ளாத வர்கள் பல் வைத்தியம் செய்வது குற்றமாகும்.

**59 ஆவது (மத்திய) சட்டம் (22-8-1950)** மந்திரிகள் சம்பளச் சட்டத் திருத்தம் (Salaries of Ministers—Amendment—Act 1950). மத்திய சர்க்கார் மந்திரி களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டிருக் கிறது. மந்திரி சபை மந்திரிக்கு (Cabinet Ministers) மாத சம்பளம் ரூ. 3000. அலவன்சு ரூ. 500; ராஜாங்க மந்திரிக்கு (Minister of State) மாத சம்பளம் ரூ. 3000 உதவி மந்திரிகளுக்கு (Deputy Minister) மாத சம்பளம் ரூ. 2000.

**60 ஆவது (மத்திய) சட்டம் (24-8-1950)** பொதுச் செலவு அங்கீகாரச் சட்டம் (The appropriation (No. 3) Act 1950). இந்திய அரசாங்கப் பொதுச் செலவுக் காக 31-3-1951 உடன் முடிவடையும் நிதி வருஷத்தில் அரசாங்கப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூ. 15,27,60,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

**61 ஆவது (மத்திய) சட்டம் (24-8-1950)** தாமாகச் சம்பளத்தைக் குறைத்து வாங்கிக்கொண்டவர் வருமான வரி விலக்குச் சட்டம். (The Voluntary Surrender of Salaries—Exemption from Taxation—Act 1950). சில பெரிய அதிகாரிகளும், மந்திரி களும், உயர் நீதிபதிகளும் தங்களுக்குள்ள மாதச் சம்பளத்தின் ஒரு பகுதியை வேண்டா மென்று பொது நன்மையை உத்தேசித்து, விட்டுக் கொடுத்து விட்டார்கள். இவ்விதம் செய்தவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது, இவர்கள் வேண்டாமென்று விட்டுக் கொடுத்த தொகையையும் வருமானமாகக் கணக்கு செய்ய வேண்டியதில்லை என்றும் அத்தொகைக்கு வரி கிடையாதென்றும் இச்சட்டம்.

## 1950 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்.

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறை வேற்றப்பட்டவை. பிராக்கெட்டில் கொடுக்கப் பட்டிருக்கும் தேதி அச்சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முக்கிய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டுள்ளன.]

**10 ஆவது (சென்னை) சட்டம்:— (1-8-1950)** சென்னை—கிராம பஞ்சாயத்துச் சட்டம் (Madras Village Panchayats Act 1950) சென்னை ராஜ்யத்திலுள்ள கிராமங் களுக்குப் பஞ்சாயத்து அமைக்கவும் அவை களுக்குப் பல புதிய அதிகாரங்கள் கொடுக்கவும் இச்சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இச்சட்டம் விவரமாய் "வக்கீல்" 1950 செப்டம்பர் இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

**11 ஆவது (சென்னை) சட்டம்:- (16-8-1950)** சென்னை குற்ற விசாரணைச் சட்டத்திருத்தம். (Indian Criminal Law Amendment (Madras) Act 1950) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட ஜீவாதார உரிமைகளைக் குறித்த விதிகளுக்கு இணங்க, இருக்க வேண்டுமென்று குற்ற விசாரணைச் சட்டத்தின் சில பாகங்கள் சென்னை சட்டசபையால் திருத்தி அமைக்கப்பட்டிருக் கின்றன.

[குறிப்பு:—இதுவும் அரசியல் அமைப்புச் சட்டத்தால் பிரஜைகளுக்குள்ள ஜீவாதார உரிமைக்கு மாறாக இருப்பதால் இச்சட்டம் செல்லத்தக்கதல்ல என்று சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டாரால் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டது.]

**12 ஆவது (சென்னை) சட்டம் (29-8-1950)** ஆந்திர சர்வகலாசாலைச் சட்டத் திருத்தம் (Andhra University—Amendment—Act 1950.)

# புதிய சட்டங்கள்

பொறுக்கியும் - விவரமாயும்

# சரக்கு விநியோக விலைநிர்ணய அவசரச் சட்டம் (1950)

[1950-ஆம் வருடத்திய 26-வது (மத்திய) அவசரச் சட்டம். (The Supply and Prices of Goods Ordinance 1950) ஜனாதிபதி அவர்களால் 2-9-1950-ல் பிரகடனம் செய்யப் பட்டது. 2-9-1950தேதி விசேஷ இந்தியா கெஜட் பாகம் II செக்ஷன் I பக்கம் 239.]

இந்திய பார்லிமெண்ட் சபை கூடாமலிருக்கும்போது ஜனாதிபதி அவர்களுக்கு அவசரச் சட்டங்கள் (Ordinance) பிறப்பிக்க உரிமை உண்டு. அதை உபயோகித்து இப்பொழுது ஜனாதிபதி அவர்களால் இந்த அவசரச் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவசரச் சட்டங்கள் பார்லிமெண்ட் கூடிய ஆறு வாரங்கள் வரைதான் அமுலில் இருக்கும். பிறகு அமுல் இழந்து விடுமாதலால் அதற்குள் இதே விஷயத்தைப் பற்றிப் பார்லிமெண்ட் கூடிய பிறகு சட்டம் செய்யலாம்.

இந்த அவசரச் சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலேயே (2-9-1950) இச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது.

**எந்தச் சரக்குகளுக்கு இச்சட்டம்:—**

முதலெடுப்பில், இச்சட்டத்திற்குள் கீழ்க் கண்ட 11 வகை சாமான்கள்தான் வரும். அச்சாமான்களைப் பற்றித்தான் இச்சட்டம். ஆனால் மத்திய சர்க்கார் வேறு எந்தச் சரக்கு அல்லது பண்டங்களையும் இச்சட்டத்திற்குள் கொண்டு வரலாம். அப்படி மற்றச் சரக்குகளுக்கும் இச்சட்டத்தை உபயோகிக்குமுன் அதைக் குறித்து மத்திய சர்க்காரால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரம் செய்யப்படும். இவ்வவசரச் சட்டத்தில் இப்பொழுது அடங்கிய சாமான்கள் விவரம்:—

(1) இரும்பு சம்பந்தமல்லாத உலோகங்கள், பித்தளை உள்பட. வேலைப்பாடுகள் செய்யப் படாமலும் அல்லது அரைகுறையாக வேலைப்பாடு செய்யப்பட்டவை உள்பட. (Non ferrous metals, including brass, Un-wrought and semi-manufactured)

(2) சைகிள்கள் (Bicycles)

(3) சைகிள் டயர், ட்யூப் (Cycle tyres and tubes)

(4) எலக்டிரிக் பல்புகள் (Electric Bulbs)

(5) க்ஷவர பிளேடுகள் (Razor Blades)

(6) காஸ்டிக் சோடா (Caustic Soda)

(7) சோடா ஆஷ் (Soda Ash)

(8) பதனிடும் சாமான்கள் (Tanning materials, wattle bark, wattle extract, quabracho)

(9) கச்சா ரப்பர் (Raw Rubber)

(10) காசீன் (Casein)

(11) குழந்தை உணவுகள் - கிளாக்ஸோ ஹார்லிக்ஸ், கௌ அண்ட் கேட் மில்க் (Infants' foods - Glaxo, Horlicks, and Cow and Gate Milk.)

**உச்ச விலை - அளவு நிர்ணயம்**

எந்தச் சரக்கைப் பற்றியும் (1) அதை எந்த விலைக்கு மேல் வியாபாரிகளாவது (மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் இச்சட்டம் உண்டு) உற்பத்தியாளராவது, தொழிற்சாலைக்காரர் உள்பட ஒரு குறிப்பிட்ட

சரக்கை விற்கக் கூடாதென்றும் (2) எந்த வியாபாரியும் உற்பத்தியாளரும் ஒரு சரக்கை எவ்வளவு அளவுக்கு மேல் கைவசம் வைத்திருக்கக் கூடாதென்றும் (3) ஒரே நபருக்கு ஒரு தடவையில் எவ்வளவு அளவுக்குமேல் விற்கக் கூடாதென்றும் மத்திய சர்க்கார் கட்டளையிடலாம். வெவ்வேறு இடங்களுக்கும் வெவ்வேறு வகை வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளர்களுக்கும் வெவ்வேறு வகையான உச்ச விலையையும் அளவையும் நிர்ணயம் செய்யலாம். விலை நிர்ணயிப்பதற்குப் பதிலாக விலையை எப்படி நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் உத்தரவிட மத்திய சர்க்காருக்கு உரிமை உண்டு. இவ்விதம் மத்திய சர்க்காரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு அந்த உத்தரவில் கண்ட விலைக்கு மேல் விற்பதும், விற்பதாகச் சொல்லுவதும், அதில் கண்ட அளவுக்கு மேல் சரக்கைக் கையிருப்பில் வைத்திருப்பதும், ஒரே ஆசாமிக்கு ஒரே தடவையில் மேற்படி உத்தரவில் கண்ட அளவுக்குமேல் விற்பதும் குற்றங்களாகும். (ஆனால் மத்திய சர்க்கார் உத்தரவில் கண்ட அளவுக்குமேல் ஒரு வியாபாரியிடமோ, உற்பத்தியாளரிடமோ சரக்குகள் இருந்தால், உடனே அது விஷயத்தை மத்திய சர்க்காருக்கோ, அவர்களால் நியமிக்கப்படும் அதிகாரிக்கோ தெரிவித்து அவர்கள் அச்சரக்கு விஷயமாய்ச் செய்யும் உத்தரவுப்படி நடந்தால் அது குற்றமாகாது) 'விற்பதாகச் சொல்வது' என்றால் விலைக்கு வாங்க வந்திருப்பவரிடம் அதிக விலையை வாயால் சொல்வதும், விலை ஜாப்தாவில் அதிகவிலை பிரசுரம் செய்வதும் வேறு எந்த வகையாகவும் அதிக விலை கேட்பதும் இச்சட்டத்தால் குற்றங்களாக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வியாபாரியோ, உற்பத்தியாளரோ தாமே நேரில் விர்பனை செய்யாமல் (அல்லது விற்பதாகச் சொல்லாமல்) ஏஜண்டு, கணக்குப் பிள்ளை, சிப்பந்தி முதலிய வேறு நபர்கள் மூலம் இச்சட்டத்தை மீறினாலும் இருவரும் குற்றம் செய்ததாகவே ஆகும். ஆனால் வியாபாரி அல்லது உற்பத்தியாளர் இவ்விதம் தம் ஆசாமிகள் ஒருவரும் செய்யக்கூடாதென்று தாம் தடுத்து முன்ஜாக்கிரதையாக இருந்ததாக ருசுப்பித்தால் மட்டில் தப்பிக்கொள்ளலாம். ஒரு வியாபாரி அல்லது உற்பத்தியாளர் தாமே நேரில் செய்யாமல் ஒரு ஏலம் போடுபவர் மூலம் தம் சரக்குகளை ஒரே தடவையில் ஒரே நபருக்கு இச்சட்டத்தில் நிர்ணயம் செய்யப்படும் அளவுக்கு மேற்கொண்ட அளவை விற்பனை செய்தால் இருவரும் குற்றம் செய்தவர்களாவார்கள்.

## பொதுமக்களும் அதிக சாமான்களை சேர்த்து வைத்திருக்கக்கூடாது.

வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் தவிர, மற்ற எவரும் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் அவசியமாகத் தேவையான அளவுக்கு மேற்கொண்டு மத்திய சர்க்காரால் இதற்காகக் குறிப்பிடப்படும் சாமான்களைக் கைவசம் வைத்திருக்கக் கூடாது. அப்படி அதிகமாக வைத்திருப்பது குற்றமாகும். ஒவ்வொரு வகை சாமான்களிலும் யார் யார் எவ்வளவு அளவு எவ்வளவு காலத்தில் வைத்திருக்கலாமென்று மத்திய சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்கள். அதற்கு மேல் ஒருவரிடம் அதிக சாமான் இருந்தால் அவ்விஷயத்தை மத்திய சர்க்காருக்கோ அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கோ தெரிவித்து அவர்கள் உத்தரவு செய்யும் விதம் சாமான்களை விநியோகம் செய்து விட்டால் குற்றமாகாது.

## சரக்கை வைத்துக் கொண்டு 'இல்லை' என்பதும் குற்றம்.

இச்சட்டத்தால் கட்டுப்படும் எந்தச் சரக்கையும் ஒரு மொத்த வியாபாரியோ சில்லறை வியாபாரியோ தம் கைவசம் வைத்துக்கொண்டு அதை வாங்க வந்திருப்பவர்களிடம் அதை (1) விற்க மறுத்தாலும் அல்லது (2) தம்மிடம் அச்சரக்கு இல்லை என்று சொன்னாலும் (3) தங்கள் கைவசம் அச்சரக்கு இல்லை என்று அதை வாங்க வந்திருப்பவர் மனதில் நினைத்துக் கொள்ளும் விதம், வார்த்தைகளாலோ நடத்தையாலோ செய்தாலும், அல்லது அச்சரக்கைத் தாம் விற்கமுடியாததுபோல் தோன்றும்படி செய்தாலும் (4) அல்லது அச்சரக்கை வாங்க வந்திருப்பவரிடம் 'வேறு ஒரு சரக்கு வாங்கிக் கொண்டால்தான் இதை விற்கமுடியும்' என்று சொன்னாலும் (5) சரக்கின் விலையை உடனே கொடுத்துவிட வேண்டும் அல்லது சரக்கை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எடுத்துக்கொண்டு

போகவேண்டும் என்ற இரண்டு நிபந்தனைகளைத் தவிர வேறு எவ்விதமான நிபந்தனைகளை வாங்குபவரிடம் வற்புறுத்தினாலும்—இவை எல்லாம் குற்றங்கள். வியாபாரி தாமே நேரில் இவ்விதம் செய்தாலும் தம்முடைய குமாஸ்தா சிப்பந்திகள் இவ்விதம் செய்தாலும் குற்றம்தான்.

ஆனால் எந்த வியாபாரியும் ஒரு குறிப்பிட்ட நிபந்தனையில்லாமல் அந்த அளவுக்குச் சரக்கு விற்பது (1) தம் தொழிலில் சாதாரணமாய் நடந்துவரும் வழக்கத்திற்கு மாறாகப் போய் விடும் என்றாவது (2) தாம் சட்டப்படி செய்ய வேண்டிய ஒரு கடமையைச் செய்ய முடியாமல் போய் விடுமென்றாவது (3) தாம் தம்முடைய வாடிக்கைக்காரர்களுக்குக் கிரமமாயும் ஒழுங்காயும் விநியோகம் செய்து வரும் முறை கெட்டுப் போய் விடுமென்றாவது—ருசுப்பித்தால் மட்டில் மேற்கண்டபடி விற்பனை செய்வதில் நிபந்தனைகள் ஏற்படுத்துவது குற்றமாகாது.

### ரொக்கப் பட்டியல் கொடுக்கவேண்டும்.

இச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட சாமான்களை ஒருவர் ரூ. 10-க்கு அல்லது அதற்கு மேல் வாங்கினாலும், அல்லது அதற்குக் குறைவாக வாங்குபவர் ரசீது கேட்டாலும், மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும் விவரங்கள் கண்ட ஒரு ரொக்கப் பட்டியல், வியாபாரியால் சாமான் வாங்குபவருக்குக் கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்காமலிருப்பது குற்றம்.

### விலை விளம்பரம், 'ஸ்டாக்' விளம்பரம்.

இச் சட்டத்தால் கட்டுப்படுத்தப் பட்ட சாமான்களைக் குறித்து ஒரு வியாபாரி விற்பனைக்காக வைத்திருக்கும் சரக்கின் மேலாவது, யாவரும் பார்க்கும்படியான இடத்தில் ஒரு தனி ஜாப்தாவிலாவது அந்தந்தச் சாமான்களின் விலை விளம்பரப் படுத்தியிருக்க வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தலாம். மேலும் ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலோ அல்லது குறிப்பிட்ட நாட்களிலோ ஒவ்வொரு சரக்கிலும் எவ்வளவு அளவு அந்த வியாபாரியிடம் இருக்கிறது என்ற விஷயத்தையும் விளம்பரப்படுத்தி வைக்கும்படியும் சர்க்கார் உத்தரவிடலாம். இவ்வுத்தரவு



பொதுவாகவும் இருக்கலாம்; குறிப்பிட்ட வகை வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளர்களைப் பொறுத்ததாகவும் இருக்கலாம். இவ்வுத்தரவுப்படி விலைகளைக் குறிப்பிடாததும் சரக்குகளின் மீது இவ்வுத்தரவின்படி போடப்பட்டிருக்கும் விலையை அழிப்பதும் அகற்றுவதும் குற்றமாகும்.

இச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் சரக்குகளைத் தவிர மற்ற எவ்வகைச் சரக்குகளுக்கும் இவ்விதம் விலை விளம்பரம் ஸ்டாக் விளம்பரம் இரண்டும் செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அதை மீறுவதும் குற்றமே.

### வேறு சாமான்களையும் சேர்த்து விற்பது.

இச் சட்டத்தால் கட்டுப்படுத்தப் பட்ட சரக்குகளையும் வேறு சாமான்களையும் சேர்த்து ஒரே மொத்த விலைக்கு விற்கும் வியாபாரியோ, உற்பத்தியாளரோ, சரக்கு வாங்குபவர் கேட்டால், இச் சட்டத்தால் கட்டுப்படுத்தப் படும் சரக்குக்கு மட்டில் என்ன விலை என்று எழுத்து மூலம் விலையைக் குறிப்பிட வேண்டும். இதிலும் இச்சட்டம் மீறப்பட்டால் குற்றமாகும்.

## கடையை மூடுவதும் குற்றம்.

இச் சட்டத்தால் கட்டுப் படுத்தப்பட்ட சரக்குகளை விற்பனை செய்யும் வியாபாரி தம் கைவசம் இருக்கும் சரக்கைக் கிரமமாய் விற்பனை செய்யாமல், பின்பு அதிக விலை அடையக் கூடுமென்ற ஆசையின்பேரில் தம் கடையை மூடி சரக்கைத் தேக்கமாக வைத்திருப்பதும் குற்றமாகும்.

## உற்பத்தி விநியோகம் சம்பந்தமான அதிகாரங்கள்.

மத்திய சர்க்கார் கீழ்க்கண்ட விஷயங்களுக்காக உத்தரவுகள் பிறப்பிக்கலாம் (1) எந்தச் சரக்கையும் எவ்விதம் விநியோகம் செய்யவேண்டுமென்றும் (2) ஒரு சரக்கைக் குறிப்பிட்ட விலைக்கு யார் யாருக்கு விற்கவேண்டுமென்றும் (3) உற்பத்தி, சப்ளை, சேமிப்பு, போக்குவரத்து, விநியோகம், உபயோகம் இவைகளை ஒழுங்குபடுத்தப் பர்மிட், லைசென்சு முதலியவைகள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் சர்க்கார் உத்தரவிடலாம்.

## தண்டனை.

இந்த அவசரச் சட்டத்தின் எந்த ஷரத்து மீறப்பட்டாலும் குற்றமாகும். மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஆனால் (முன்பு சொல்லப் பட்டபடி) கையில் சரக்கை வைத்துக் கொண்டே சரக்கை விற்க மறுக்கும் வியாபாரிக்கும், சரக்கு இல்லை என்று சொல்லும் வியாபாரிக்கும், விற்பனை செய்ய நிபந்தனைகள் போடும் வியாபாரிக்கும் கட்டாயமாகச் சிறைத் தண்டனை உண்டு. அத்துடன் அபராதமும் சேர்க்கப்படலாம். அதிகாரியால் இச் சட்டத்தின் கீழ் போடப்படும் குறிப்பிட்ட உத்தரவை மீறினால் ஒரு வருஷம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். தவிர குற்றம் சம்பந்தப்பட்ட சரக்குகள் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படும். கம்பெனிகள் சம்பந்தப்பட்ட வரையில் கம்பெனிகளால் செய்யப்படும் குற்றத்திற்கு அதன் முக்கிய நிர்வாகஸ்தர்களும் தெரிந்தோ, அசட்டையாலோ சட்டத்தை மீறும்படி விட்ட டைரக்டர்கள், மானேஜர்கள், செக்ரடரிகள் முதலியவர்கள் குற்றம் செய்தவர்களாகக் கருதப் படுவார்கள்.

சோதனை:—இச் சட்டத்தின் ஷரத்துக்களை அமுல் நடத்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எந்த அதிகாரிக்கும், அந்த இடங்களில் சோதனை போடவும் சரக்குகளைக் கைப்பற்றவும் மத்திய சர்க்கார் அதிகாரம் கொடுக்கலாம். இவ்விதம் அதிகாரம் கொடுக்கப்பட்ட அதிகாரிகளை அவர்கள் வேலை செய்ய முடியாமல் தடுப்பதும் இடையூறுகள் செய்வதும் குற்றமாகும்; ஆறு மாதச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். குற்றங்களை மாஜிஸ்ட்ரேட்டுகள் துரித விசாரணை முறையில் (Summary trial) விசாரிக்கலாம்.

## வியாபாரிகளின் கணக்குகள்.

இவை எவ்விதம் வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்யலாம். வியாபார சம்பந்தமான விஷயங்களைக் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் தேவையானால் வியாபாரிகள் சொல்லவேண்டும் என்று வற்புறுத்தலாம்.

**இதன் மூலம் அறிந்த செய்திகளை வெளிப்படுத்தக் கூடாது:**—இந்த அவசரச் சட்டத்தை அமுல் நடத்துவது மூலம் கிடைத்த எந்தச் சமாசாரத்தையும், இந்தச் சட்டத்திற்கு உபயோகப் படுத்துவதைத் தவிர ஒருவரும் மற்றப்படி வெளிப்படுத்துவதும் ஒரு குற்றமாகும். ஆனால் இச்சட்டத்தின்படியாவது மற்ற எந்தச் சட்டத்தின்படியாவது கிரிமினல் வழக்குகளைத் தொடர தேவையான சமாசாரங்களைத் தெரிவிப்பது குற்றமாகாது. அக் குற்றத்திற்கு மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப் படலாம்.

## மத்திய சர்க்காரின் அதிகாரங்கள்

மத்திய சர்க்கார் இந்தச் சட்டத்தின் சில விதிகள் அல்லது எல்லா விதிகளிலிருந்தும், எவரையும், அல்லது எந்தச் சாமானையும் விலக்க அதிகாரமுண்டு.

மத்திய சர்க்கார் இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களுக்குள்ள அதிகாரங்களை, எந்த ராஜ்ய சர்க்கார் அல்லது அதிகாரி உபயோகிக்கலாம் என்று உத்தரவிடலாம்.

எந்தச் சாமான்களைக் குறித்தும், அவைகளை வைத்துக் கொள்வது, சோதனை செய்வது, விநியோகம் செய்வது, விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் வேறு சட்டம் எவையிருந்தாலும் அந்தச் சட்டத்திற்குக் குந்தகமின்றி இந்தச் சட்டமும் அனுஷ்டிக்கப்படும்.

[இச் சட்டத்தை அனுசரித்து மத்திய சர்க்காராலும் சென்னைச் சர்க்காராலும் செய்யப் பட்டிருக்கும் விலை நிர்ணயம் முதலிய உத்தரவுகளை "கண்ட்ரோல்" பகுதியில் பார்க்கவும்]






இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## நீதி பரிபாலனம் செய்பவர் எவரும் தம் வழக்கைத் தாமே விசாரணை செய்து கொள்ள முடியாது.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்.

நீதிபதிகள்: பிரதமநீதிபதி கனம் ராஜமன்னார் அவர்களும் நீதிபதி சோமசுந்தரம் அவர்களும்.

ஆதாரம்: 1950 (2) மதராஸ் லா ஜர்னல்—322.

உங்களுக்கும் வேறு ஒருவருக்கும் ஒரு சிறிய சண்டை அல்லது சச்சரவு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். நீங்களும் உங்கள் எதிரியும் சேர்ந்து, உங்களுக்கு நம்பிக்கை உள்ள சிலரைப் பஞ்சாயத்தாக அமைத்து உங்கள் இருவர்களுக்குள் இருக்கும் தகவல்களைப் பற்றிய ஒரு முடிவுக்கு வரும்படி அவர்களை நீங்கள் இருவரும் கேட்டுக் கொள்ளுகின்றீர்கள். அப்பஞ்சாயத்தில் ஒருவராக உங்கள் எதிரியே இருக்கும்படி நீங்கள் சம்மதிப்பீர்களா? அல்லது நீங்கள் ஒரு பஞ்சாயத்தாராக இருக்க உங்கள் எதிரிதான் சம்மதிப்பாரா? இரண்டுமில்லை. ஏன்? கக்ஷி செய்து சண்டையிடுபவரே எப்படி ஒரு பற்றுதலற்ற மனப்பான்மையுடன் நடுநிலைமை வகித்து நியாயம் வழங்கமுடியும் என்று தோன்றுகிறதல்லவா? இது சரிதான்.

இது சம்பந்தமாய் நீதி பரிபாலன முறையில் ஒரு அடிப்படையான நியாய விதி ஒன்று இருக்கின்றது. அவ்விதியை உயர் நீதிபதிகள் இவ்வழக்கில் நன்கு விளக்கி இருக்கின்றனர். இவ்விதியை ஆங்கிலத்தில் "No man can be a Judge in his own cause" என்று சொல்வது. அதாவது "நீதி செலுத்துபவர் எவரும் தம் சொந்த வழக்குக்குத் தாமே நீதிபதியாக இருக்கக்கூடாது" என்ற விதி.

இந்நாட்டிலுள்ள கோர்ட்டுகளைத் தவிர, குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் நீதியும் நியாயமும் வழங்கும் உரிமை இப்பொழுது ஆயிரக்கணக்கான தனி நபர்களிடமும் பொது ஸ்தாபனங்களிடமும் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள், கிராமப் பஞ்சாயத்துப் போர்டுகள், பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மோட்டார் போக்குவரத்துப் போர்டுகள், தேர்தல் கமிஷன்கள், மதபரிபாலன போர்டு, வைத்தியக் கவுன்சில், போன்ற பல வகைப்பட்ட ஸ்தாபனங்கள் குறிப்பிட்ட விஷயங்களில் ஏற்படும் வழக்குகளையும் சச்சரவுகளையும் விசாரித்து முடிவு செய்யும் பொறுப்பை உடையன.

உதாரணமாக ஒரு கோர்ட்டின் நீதிபதியே சொந்த முறையில் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ இருக்கும் ஒரு வழக்கை, அவரே நீதிபதி என்ற முறையில் விசாரித்து அவரே தீர்ப்புச்செய்வது என்றால், அதைவிட வெறுக்கக்கூடியதும் அபாயகரமானதுமான நிலைமை நீதி பரிபாலனத்தில் இருக்காது. ஒரு வழக்கை விசாரித்துத் தீர்மானம் செய்யவேண்டியவர் ஒருவராக இல்லாமல் பல நபர்கள் அடங்கிய ஒரு ஸ்தாபனம், கவுன்சில், கமிட்டி போன்ற

வையாக இருந்தாலும் அதே விதிதான்; அதே நியாயம்தான். அதாவது பல பெயர்கள் அடங்கிய அந்த ஸ்தாபனத்தில், அதன் அங்கத்தினர் ஒருவருடைய சொந்த விஷயங்களைப் பற்றியோ, சொந்த விவகாரங்களைப் பற்றியோ, அவருக்கு அக்கரை அல்லது சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியோ ஒரு விசாரணை அல்லது முடிவு செய்ய வேண்டியதாக இருந்தால், அவர் தம் விஷயங்களைப்பற்றி ஆலோசனை நடக்கும் போது அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது. அந்த ஸ்தாபனத்தின் ஒரு அங்கத்தினர் என்ற ஹோதாவில் அவருக்கு அதில் கலந்துகொள்ள உரிமை இருந்த போதிலும், அவர் தம் சொந்த விஷயங்களில் அவ்வுரிமையைச் செலுத்தக் கூடாது. அவருக்கு அதிகாரம் கொடுக்கும் சட்டத்தில் இவ்விதம் குறிப்பாக ஒருவர் தடை செய்யப்பட்டிருக்தாலும், இல்லாவிட்டாலும், இயற்கை நீதி தத்துவத்தை (Natural justice) ஒட்டி அவர் தம் சொந்த விஷயங்களில் முடிவு செய்யத் தாமும் கலந்துகொள்ள அனுமதிக்கப் படமாட்டார். அவ்விதம் அவரும் கலந்து கொண்டால் அந்த ஸ்தாபனம் அவர் சொந்த விஷயத்தில் செய்த தீர்மானம் செல்லாது. உதாரணமாக:—ஒரு முனிசிபல் கவுன்சில் அங்கத்தினர் தம்மீது விதிக்கப்பட்டிருக்கும் வீட்டுவரி அதிகம் என்று முனிசிபல் கமிட்டிக்கு அப்பீல் செய்கிறார். அவர் அக்கமிட்டியின் ஒரு அங்கத்தினர். ஆனால் தம்முடைய சொந்த விவகாரம் அக்கமிட்டியால் ஆலோசனை செய்யப்படும் பொழுது அவர் அதில் கலந்து கொள்ளக் கூடாது.

பிரஸ்தாப வழக்குப் பின் வருமாறு:— சென்னை மெடிகல் கவுன்சில் (Medical Council) என்று ஒரு வைத்திய சபை, சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்டு அதற்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இச்சபைக்கு மொத்தம் 15 அங்கத்தினர்கள். இவர்களில் 7 அங்கத்தினர்கள் டாக்டர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். 1946ல் நடந்த தேர்தலில் 7 டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்களில் ஒருவர் அச்சபைக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவருடைய தேர்தலும் மற்றும் ஆறு அங்கத்தினர்களுடைய தேர்தல்களும் ஒழுங்கான முறையில் நடக்கவில்லை என்றும் அவர்களுடைய தேர்தல்களை ரத்து செய்து வேறு தேர்தல் நடத்தவேண்டுமென்றும், தோல்வியடைந்த சில டாக்டர்கள் மனுச்செய்தனர். தேர்தல் சம்பந்தமான ஆக்ஷேபனைகளை விசாரித்து முடிவு செய்ய வேண்டியது மெடிகல் கவுன்சிலின் கடமையாகும். அதன்படி மெடிகல் கவுன்சில் இத்தேர்தல் ஆக்ஷேபனை மனுவைப் பரிசீலனை செய்து, தேர்தல் சரியாகத்தான் நடந்திருக்கிறதென்றும், அதை ரத்து செய்யவேண்டிய காரணங்கள் இல்லை என்றும் முடிவுக்கு வந்தனர். இவ்விதம் முடிவு செய்த மெடிகல் கவுன்சில் கூட்டத்தில், எந்த அங்கத்தினர்களின் தேர்தல்கள் செல்லாதென்று மனுப்போடப் பட்டிருக்கிறதோ, அதே அங்கத்தினர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். அதில் ஒருவர் தான் தலைவராதலால் அவருடைய தலைமையின் கீழ்தான் தேர்தல் ஆக்ஷேபனை விஷயம் ஆலோசிக்கப்பட்டது. அதாவது, யார் மீது புகார்கள் சொல்லப்பட்டதோ, அவர்களே அப் புகாரை விசாரிப்பவர்களில் சிலராக இருந்தனர். இது ஒரு பெரிய நியாய விரோதமான முறை.

இவ்விதம் மெடிகல் கவுன்சில் செய்தது சரி அல்ல என்று சர்க்காருக்கு மனுச் செய்யப்பட்டு சர்க்காரால் இதை விசாரிக்க வேறு அதிகாரி (ஸர்ஜன்—ஜெனரல்) நியமிக்கப்பட்டு, அவர் இத்தேர்தல் செல்லாதென்று சொல்லிவிட்டார். இவ்விதம் செய்ய, சர்க்காருக்கும் அந்த அதிகாரிக்கும் சட்டப்படி உரிமையில்லை என்றும், தேர்தல் செல்லுமென்று மெடிகல் கவுன்சில் சொல்லியது தான் முடிவான தீர்மானம் என்றும் அதை மாற்றச் சட்டப்படி வேறு ஒருவருக்கும் அதிகாரமில்லை என்றும், அதிகாரியின் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் மெடிகல் கவுன்சில் தலைவராக இருந்தவரும் அவரைப் போலுள்ள மற்றவர்களும் ஹைகோர்ட்டுக்குப் பரிசிலனை மனு (certiorari) கொடுத்தார்கள்.

உயர் நீதிபதிகள் இம்மனுவை ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது மெடிகல் கவுன்சில் தேர்தல் சம்பந்தமாய், செய்த விசாரணை நியாய விரோதமானதென்றும், யார்மீது புகார் செய்யப்பட்டதோ அவர்களே நீதிபதியாகவும் இருந்து முடிவு செய்யச் சட்டம் இடங் கொடுக்காதென்றும், பின்பு அதிகாரியால் செய்த முடிவுதான் செல்லுமென்றும், அபிப்பிராயப்பட்டு இவர்களுடைய தேர்தல்கள் ரத்து செய்யப்பட்டது சரியானதே என்று தீர்ப்பளித்தனர்.

இவ்விதி இங்கிலாந்தில் எவ்வளவு கண்டிப்பாய்க் கௌரவிக்கப்பட்டு கையாளப் படுகிறதென்பதற்கு ஓர் ஆங்கில வழக்கின் உதாரணத்தை நீதிபதிகள் எடுத்துக் காண்பித்திருக்கின்றனர். அதாவது இங்கிலாந்தில் ஒரு கிரிமினல் கேஸ் விசாரணை நடக்கும்போது சர்க்கார் தரப்பில் ஆஜராகி இருந்த ஒரு பெரிய போலீஸ் அதிகாரி வழக்கை விசாரித்த நீதிபதிகளுடன் சேர்ந்தாற்போல் உட்கார அனுமதிக்கப்பட்டார். பொது ஜனங்களின் பார்வைக்கு இப்போலீஸ் அதிகாரியும் நீதிபதிகளில் ஒருவர் போல் தோற்றமளிக்கும் நிலைமையில் அவர் உட்கார்ந்திருந்தார். ஆனால் அவர் நீதிபதிகளுடன் யாதொன்றும் பேசக்கூட இல்லை. அக் கோர்ட்டால் தண்டிக்கப்பட்ட எதிரி உயர் நீதி ஸ்தலத்திற்கு அப்பீல் செய்தார். இவ்விதம் கீழ்க்கோர்ட் போலீஸ் அதிகாரியை நீதிபதிகள்போல் தோற்றமளிக்கும்படி உட்கார வைத்திருந்தது தவறென்றும், அவர்கள் செய்த தீர்ப்பு அதனால் செல்லுபடி யிழந்ததென்றும் ஆங்கில உயர் நீதிபதி அபிப்பிராயப்பட்டார். கக்ஷிக்காரர்களில் ஒருவர் நீதிபதிகளைத் தம் வசப்படுத்தி விடுவாரோ என்ற பயம் எவருக்கும் இருக்கவும் கூடாது; இருப்பதாகத் தோற்றமளிக்கவும் கூடாது. இவ்வித பயம் இருந்தாலும் தோற்றமளித்தாலும், அந்நிலைமையில் செய்யும் தீர்மானங்களும் தீர்ப்புக்களும் உபயோகமற்றவை; சக்தி இழந்தவை; செல்லா - என்று ஆங்கில நீதிபதி சட்ட விளக்கம் செய்திருப்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

---

## "கண்ட்ரோல்" சட்டத்தை மீறுவதில் கெட்ட எண்ணம் ஒன்றுமில்லாவிட்டாலும் குற்றம் குற்றம்தான்!

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: நீதிபதி கனம் பஞ்சாபகேச சாஸ்திரி அவர்கள்

ஆதாரம்: 1950 (2) மதராஸ் லா ஜர்னல் - 334.

ஒரே விதமான செய்கை சட்டப்படி "குற்றமா"கவும் இருக்கலாம். குற்றமில்லாமலும் இருக்கலாம். அச் செய்கையைச் செய்பவரின் மன நிலைமையைக் (mensrea) கொண்டுதான் அவர் செய்தது குற்றமா அல்லவா என்று சொல்லமுடியும்.

உதாரணமாக: ஒரு டாக்டர் தம் கத்திகளை உபயோகித்து ஆபரேஷன் செய்கிறார். டாக்டர் எவ்வளவோ கவலையாகச் சிகிச்சை செய்தும் நோயாளி இறந்துவிடுகிறார். டாக்டர் தம் கடமையை நன்கு செய்தார். இவர் செய்தது ஒரு போற்றற்குரிய செய்கை.

ஆனால் அதே நோயாளியின் வீடு புகுந்து அவருடைய சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் எண்ணத்துடன் ஒரு கொள்ளைக்காரன் அந் நோயாளியைத் தன் கத்திகளால் குத்தி அவர் இறந்திருந்தால் கொள்ளைக்காரன் செய்தது "கொலை". ஒரு பெரிய குற்றம். இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். நீங்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது உங்கள் பெட்டியைத் தம்முடையதென்று உண்மையாகவே நினைத்து, உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் தட்டுக்கெட்டு அதை எடுத்துச் சென்றுவிட்டால், அது குற்றமல்ல. ஆனால் அப்பெட்டியிலிருக்கும் பண்டங்களை உங்களிடமிருந்து அபகரித்து அடையும் எண்ணத்துடன் அதை ஒருவன் எடுத்துச் சென்றால் அவன் திருடன்; அவன் செய்த அதே செய்கை ஒரு "குற்ற"மாகும். எல்லாம் ஒரு செய்கையைச் செய்பவரின் மன நிலைமையைப் பொறுத்தது.

இது குற்றங்களின் இயல்பைப் பற்றிய பொதுவான விதிகளில் ஒன்று. ஆனால் எந்த

எண்ணத்துடன் செய்தாலும் எந்தச் செய்கையையும் "குற்றம்" என்று ஒரு சட்டம் சொல்லக் கூடும். பொது நன்மையின் பொருட்டு அவ்வித மான சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

அவ்விதமான சட்டங்களில் "கண்ட்ரோல்" சம்பந்தமான சட்டங்களும் விதிகளும் அடங்கியவை. ஒரு வியாபாரி என்ன செய்யவேண்டும்; என்ன விலைக்கு விற்க வேண்டும்; எப்படி ரசீது கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிகளை ஒருவர் யாதொரு கெட்ட எண்ணமும் இல்லாமலே மீறி விட்டால் அது குற்றமாகுமா என்ற பிரச்னை இவ்வழக்கில் ஏற்பட்டது.

அரிசி விற்பனை செய்த ஒரு வியாபாரி அரிசி வாங்கிய மூன்று நபர்களுக்குக் கொடுத்த ரசீதுகளில் அவர்களுடைய விலாசம் கொடுக்கப்படவில்லை. அந்த ரசீதுகளின் அடிக்கட்டைகளில் (Counter foil) அவருடைய கடையின் லைசென்சு நம்பர் எழுதப்படவில்லை. "கண்ட்ரோல்" விதிகளின்படி இவ்விரண்டும் அவ்வியாபாரி செய்திருக்க வேண்டியவை. சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு அவர் மாஜிஸ்ட்ரேட்டால் அபராதம் விதிக்கப் பட்டார். தண்டனை அடைந்தவர் ஜில்லா ஜட்ஜுக்கு அப்பீல் செய்ததில் தண்டனை உறுதி செய்யப்பட்டு அபராதம் மட்டில் குறைக்கப்பட்டது.

தண்டிக்கப் பட்டவர் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுக் கொடுத்தார். யாதொரு கெட்ட எண்ணத்துடனும் அந்த வியாபாரி இவ்விதம் ரசிதுகள் கொடுக்கவில்லை என்றும் அவ்விதமான கெட்ட எண்ணம் அவருக்கு இருந்ததாக ருசு விடப்படவில்லை என்றும் ஆகையால் அவரால் யாதொரு குற்றமும் செய்யப்படவில்லை என்றும் குற்றவாளிக்காக வாதாடப்பட்டது.

இதை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த வியாபாரிக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சின் நிபந்தனைகளின் படி அவர் எப்படி ரசீது கொடுக்கவேண்டுமென்று தெரிந்திருந்தும், அதை மீறியதே போதுமென்றும், இதைத் தவிர வேறு லாப மடைய வேண்டும் என்பது போன்ற கெட்ட எண்ணம் இருந்தாலும் இல்லா விட்டாலும் சட்டத்தை மீறும் இவ்வித செய்கைகள் குற்றங்களாகும் என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு தண்டனை உறுதி செய்யப் பட்டது.

## ஸ்டாம்பு சட்டத் தீர்ப்பு—லக்ஷ ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்தை "மதிப்பு ரூ. 3000" என்று செட்டில்மெண்ட் எழுதி அதற்கான ஸ்டாம்பு வாங்கினால் சரியா?

கோர்ட்:- சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள் :- நிறைமன்றம்; கனம் நீதிபதி ஹார்வில்; கனம் நீதிபதி விசுவநாத சாஸ்திரி; கனம் நீதிபதி பாலகிருஷ்ண அய்யர்.

ஆதாரம் :- 1950 (1) மதராஸ் லா ஜர்னல்—பக்கம் 213.

ஸ்டாம்புச் சட்டத்தில் சந்தேகம் இருக்கும் ஒரு இடத்தை இத் தீர்ப்பு விளக்கம் செய்கின்றது. ஒருவர் தம்முடைய சொத்துக்களைத் தம் மனைவி மக்களுக்கோ, நெருங்கிய உறவினருக்கோ அல்லது கோயில் தர்மம் முதலிய காரியங்களுக்காகவோ, பத்திர மூலமாக எழுதிக் கொடுக்கும் தஸ்தவேஜிக்கு ஆங்கிலத்தில் "செட்டில்மெண்ட்" என்று சொல்வது. செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஸ்டாம்பில் எழுதப்பட வேண்டும். ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தமாக இருந்தால் 'ரிஜிஸ்டர்' செய்யப் படவேண்டும். எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்பு வேண்டுமென்றும் ஸ்டாம்பு சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது செட்டில்மெண்ட் பத்திரத்தால் கொடுக்கப்படும் "சொத்தின் மதிப்பு" எவ்வளவென்று அப் பத்திரத்தில் காணப் பட்டிருக்கிறதோ அந்த மதிப்புக்குள்ள ஸ்டாம்பு வேண்டும். உதாரணமாக:-சொத்தின் மதிப்பு ரூ. 100 என்று செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டிருந்தால் ரூ. 1-8-0 ஸ்டாம்பு வேண்டும். சொத்தின் மதிப்பு ரூ. 1000 என்று செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டிருந்தால் ரூ. 15 ஸ்டாம்பு வேண்டும். "பத்திரத்தில் கண்டிருக்கும் சொத்தின் மதிப்பு" என்றால் என்ன? ஒருவர் இஷ்டப்படி மதிப்புப் போட்டுக்

கொண்டு அதற்கான ஸ்டாம்பு வாங்கி எழுதினால் போதுமா?

**பிரஸ்தாப வழக்கில்:**—ஒருவர் ஒரு லக்ஷ ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள தம் சொத்துக்களைக் குறித்து ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார். அப்பத்திரத்தில் "ஸ்டாம்புக்காகவும் ரிஜிஸ்ட்ரேஷனுக்காகவும் இதன் மதிப்பு ரூ. 3000" என்று பட்டுக்கொள்ளாமல் எழுதி அதற்கான ஸ்டாம்பில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்யத் தாகல் செய்தார். செட்டில்மெண்ட்டில் கண்ட சொத்துக்கள் மிக அதிகம் பெறுமென்று ரிஜிஸ்ட்ராருக்குத் தோன்றியதால் அவர் அப்பத்திரத்தை ஸ்டாம்பு நிர்ணயம் செய்வதற்காக ஸ்டாம்பு சட்டப்படி கலெக்டருக்கு அனுப்பினார். ஸ்டாம்பு எவ்வளவு என்று கலெக்டருக்குச் சந்தேகம் வந்தால் அவர் ரெவின்யூ போர்டைக் கேட்கலாம் என்று ஸ்டாம்பு சட்டத்தில் இருக்கிறது. அதை அனுசரித்து இப்பத்திரம் கலெக்டரால் ரிவின்யூ போர்டாருக்கு அனுப்பப்பட்டது. ரிவின்யூ போர்டாருக்கும் சந்தேகம் வந்தால் அவர்கள் ஹைகோர்ட்டின் அபிப்பிராயத்தைக் கோர உரிமை உண்டு. இதன்படி இந்தச் செட்டில்மெண்ட் பத்திரத்திற்குப் போடப்பட்டிருக்கும் "மதிப்பும்" ஸ்டாம்பும் சரியா என்று ரெவின்யூ போர்டார் ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயத்தைக் கோரியதன் பேரில் நீதிபதிகள் இவ்வழக்கில் அபிப்பிராயம் கூறியிருக்கின்றனர்.

ஸ்டாம்பு சட்டப்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்களுக்கு அப்பொழுதுள்ள காலக்கிரய விலை (Market-Value) எதுவோ அதுதான் அதன் "மதிப்பு" என்றும் அதற்கான ஸ்டாம்புதான் வாங்க வேண்டுமென்றும் சொத்தை எழுதி வைப்பவர் இந்த உண்மையான காலக்கிரய மதிப்பைத்தான் செட்டில்மெண்ட் பத்திரத்திலும் காண வேண்டுமென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். ஆனால் ஸ்டாம்புச் சட்டத்தில் சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று பத்திரத்தில் சொல்லப்படுகிறதோ அதற்குத்தான் ஸ்டாம்பு வேண்டுமென்று இருப்பதால், ஒருவர் வேண்டுமென்று ஒரு குறைவான மதிப்பை "சொத்தின் மதிப்பாக"க் கண்டிருந்தாலும் அது போதாதென்று பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்யும் ரிஜிஸ்ட்ரார் சொல்ல முடியாது; பத்திரத்தில் கண்டிருக்கும் சொத்து மதிப்புக்குப் போதுமான ஸ்டாம்பு இருக்கிறதா என்று மட்டில் ரிஜிஸ்ட்ரார் பார்த்தால் போதும். விசாரணை செய்து சொத்தின் உண்மையான மதிப்பை நிர்ணயித்து அதற்கான ஸ்டாம்பு வேண்டுமென்று கேட்க ரிஜிஸ்ட்ராருக்கோ வேறு அதிகாரிகளுக்கோ ஸ்டாம்பு சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். சொத்தின் மதிப்பே காணப்படாத செட்டில்மெண்ட்பத்திரத்தை, "சரியான ஸ்டாம்பில் எழுதப் படவில்லை" என்ற காரணத்தினால் ரிஜிஸ்டர் செய்ய முடியாதென்று (ஸ்டாம்பு சட்டம் 35 ஆவது செக்ஷன்படி) ரிஜிஸ்ட்ரார் மறுக்கலாமென்றும், பிரஸ்தாப வழக்கில் "சொத்தின் மதிப்பு" என்று ஒன்றும் கொடுக்கப் படாததனால் அதை ரிஜிஸ்டர் செய்ய மறுக்க ரிஜிஸ்ட்ராருக்கு உரிமை உண்டென்றும் நீதிபதிகள் சட்டத்தை விளக்கியிருக்கின்றனர்.

(பிரஸ்தாப வழக்கில் ஏற்பட்ட செட்டில்மெண்டில் "சொத்தின் மதிப்பு" சொல்லப்படவில்லை. "ஸ்டாம்புக்காகவும் ரிஜிஸ்ட்ரேஷனுக்காகவும் மதிப்பு ரூ. 3000" என்றுதான் பட்டுக்கொள்ளாமல் சொல்லப் பட்டிருந்தது.)

ஆனால் ஸ்டாம்பு சட்டத்தின் 27 ஆவது செக்ஷன்படி "ஒவ்வொரு பத்திரத்திலும், அதன் (பிரதிப் பிரயோஜனம் இருந்தால்) உண்மையான பிரதிப் பிரயோஜனம் எவ்வளவு என்றும், ஸ்டாம்பு நிர்ணயம் செய்வதற்கான சொத்தின் மதிப்பு முதலியவைகளும் உண்மையாகச் சொல்லப்பட வேண்டும்" என்று இருக்கிறது என்றும் அவ்விதம் உண்மையைச் சொல்லாமல், அதாவது சொத்தின் காலக்கிரய மதிப்பைச் சொல்லாமல், அதை மறைத்து, சர்க்காருக்கு ஸ்டாம்பு கொடுக்காமல் இருப்பதற்காகப் பொய் மதிப்பைச் சொல்வது ஸ்டாம்பு சட்டப்படி ஒரு குற்றம் என்றும், இதற்காகப் பிராசிகூஷன் செய்யப்படலாமென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ரூ. 5000 வரை இக் குற்றத்திற்கு அபராதம் விதிக்கப்படலாம்.

பிரஸ்தாப வழக்கில் செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்துக்களின் உண்மையான காலக் கிரய மதிப்பைச் சொல்லாமலிருப்பது ஸ்டாம்பு சட்டப்படி ஒரு குற்றமாகுமென்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.



# கேள்வியும் பதிலும்

> இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

**கேள்வி:** (L 3293 - சங்கராலய பிள்ளை, திருநெல்வேலி) சென்னை சர்க்கார் 12-11-1949-ல் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பியதில் புது ரைஸ்மில்களுக்கு லைசென்சு கொடுக்க வேண்டாமென்று உத்தரவு அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. இந்த உத்தரவுக்கு முன் மில்கள் கட்டி ஒரு வருடத்திற்கு முன்பே லைசென்சு கிடைக்க மனுச் செய்தவர்களையும் பாதிக்குமா?

**பதில்:** அவ்வப்பொழுது இருக்கும் நிலையைக் கவனித்து, புது ரைஸ்மில்களுக்கு லைசென்சு கொடுக்கவும் மறுக்கவும் கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. கலெக்டர்கள் எவ்விதம் செய்ய வேண்டுமென்று உத்தரவிடச் சர்க்காருக்கும் உரிமை உண்டு. ஒரு வருடத்திற்கு முன்பே கட்டடங்கள் கட்டி லைசென்சுக்கு மனுப்போட்டாகிவிட்டதால் மட்டில் ஒருவருக்கு லைசென்சு பெற உரிமை ஏற்படாது. பொது மக்களின் நன்மையை உத்தேசித்துக் கட்டுப்பாடு விதிகள் கையாளப்படுமே ஒழிய, ஒரு தனி நபரின் லாப நஷ்டத்தைக் கவனித்து இவ் விதிகள் உபயோகப் படுத்தப்பட மாட்டா.

**கேள்வி:** (L 3294 — K. A. சலாம் — அரியலூர்) ஊரில் பல பெயர்கள் பல விதமான பிரைஸ் சீட்டுகள் நடத்திவருகிறார்களே! அதற்கு அனுமதி உண்டா? கவர்ன்மெண்ட்டாரின் அத்தாட்சி இல்லாமல் நடத்தலாமா? அதற்குச் சட்ட மிருக்கிறதா?

**பதில்:** இந்தியன் பீனல் கோடு, 294 - A செக்‌ஷன்படி இவை, மாகாண சர்க்காரின் அனுமதியின்றி நடத்தினால் குற்றமாகும்.

**கேள்வி:** (L 3307-ராமமூர்த்தி, நன்னிலம்) ஒருவன் (ஹிந்து) 1943-ல் விவாகம் செய்துகொண்டு ஒரு வருஷம் ஒற்றுமையாக இருந்து, ஒரு குழந்தையும் பிறந்து, பிறகு சில மனஸ்தாபம் காரணமாக மனைவி பிரிந்து தன் தாயார் வீட்டிலிருந்து வருகிறாள். 1946-ல் குழந்தையும் இறந்து விட்டது. 1948-ல் புருஷன் மறு விவாகம் செய்து கொண்டார். அதனால் அவருக்கு ஏதேனும் சட்டப்படி கெடுதல் உண்டா. முதல் மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமா? பலமுறை முதல் மனைவியைக் கூப்பிட்டும் வராததினால் மறு விவாகம் செய்து கொண்டார்.

**பதில்:** சென்னை பலதாரத் தடைச் சட்டம் 29-3-1949-ல் அமுலுக்கு வந்தது. அதற்கு முன்பே மறு விவாகம் நடந்துவிட்ட படியால், மறு விவாகம் செல்லும். ஆனால் புருஷன் இரண்டாவது விவாகம் செய்து கொண்டார் என்ற காரணத்தினாலேயே, முதல் மனைவி தனியாக வசிக்கவும், புருஷனிடம் ஜீவனாம்சம் வாங்கவும், உரிமை உண்டு. (1946 ஆம் வருடத்திய 19 ஆவது (மத்திய) சட்டம்.

**கேள்வி:** (L 3318)-ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் (கிராம அதிகாரி) வேறு ஒருவர் பெயரில் தம் உத்தியோகத்தை மாற்றித் தருகிறேன் என்று தொகை பேசி, பாதியைப்

பெற்று விட்டார். பிறகு இவருக்கும் சில்லறைத் தகாரினுல் பிளவு பட்டுவிட்டது. அவர் பெற்றுக் கொண்ட பணத்திற்கு மணியார்டர் ரசீதுகளும், உத்தியோகத்தை மாற்ற அவர் சர்க்காருக்கு எழுதிய கடிதம், அவருடைய ராஜீனமா, இவைகளின் நகலும் பணம் கொடுத்த வரிடம் இருக்கின்றன. (இப்பொழுது அவருடைய வார்சு உத்தியோகம் பார்க்கிருர்) இவைகளை வைத்துக் கொண்டு பணம் கொடுத்த வர், தாம் கொடுத்த பணத்தைத் திரும்ப வாங்கத் தாவா செய்ய முடியுமா?

**பதில்:** பணம் கொடுத்தவர் திரும்ப அதை வாங்க முடியாது. சர்க்கார் உத்தியோகத்தைப் பணம் கொடுத்து மாற்றிக் கொள்வது சட்ட விரோதமான ஒரு ஏற்பாடு. சட்ட விரோதமான காரியம் என்று ஆரம்பத்திலிருந்தே தெரிந்து கொடுத்து ஏமாந்து போனவர் தாம் கொடுத்த பணத்தைத் திருப்பி அடைய வழக்குப் போட்டால் தள்ளி விடுவார்கள். திருடனுக்குத் தேள் கொட்டினல் ஒருவரும் உதவிக்கு வர மாட்டார்கள். (இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட்-செக்ஷன் 23—இந்தியன் லா ரிபோர்ட்ஸ் 30-மதராஸ் 530—என்ற தீர்ப்பு-கர்ணம் வேலையை மாற்றிக் கொடுப்பது பற்றியது.)

**கேள்வி:** (L 3333) 1948 - 49 வருஷத்தில் புது வியாபாரிகள் ரயில்வே கூட்ஸ் ஷெட்டுக்கு வந்து வண்டி புரோக்கர்கள் மூலம் ரயில்வேயில் சரக்கு பாஸ் செய்ய வாகன் ரிஜிஸ்டர் செய்யச் சொன்னுர்கள். வாகன் டிமாண்டு காரணமாக, வியாபாரிகள் பெயருக்கும் புரோக்கர்கள் பெயருக்கும் வாகன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. வண்டி புரோக்கர்கள் பெயருக்கும் வியாபாரிகள் பெயருக்கும் வாகன் கிடைத்தது. இதுமாதிரி பல தடவைகளில் பாஸ் செய்யப்பட்டது. பாஸ் செய்துகொண்டு போன வியாபாரிகள் யார் யார் என்று கூட இப்புரோக்கர்களுக்கு இப்பொழுது தெரியாது. இன்று விற்பனை வரி அதிகாரி வண்டி புரோக்கர் பெயருக்கு வாகன் ரிஜிஸ்டர் செய்ததைக் கணக்கெடுத்து, சரக்கின் சுமார் கிரயத்திற்குப் புரோக்கர்களுக்கு விற்பனை வரி விதித்திருக்கிருர். இவ்விதம் வண்டி புரோக்கர் பெயருக்கு வாகன் ரிஜிஸ்டர் செய்து, சரக்கு பாஸ் செய்தால் அவரையும் "வியாபாரி" எனக் கருதி வரி விதிக்கப்படுமென்று இதுவரை முன் கூட்டியே எச்சரிக்கை செய்யப்படவில்லை. வரி விதிக்கப்பட்டிருப்பது சரியா? செல்லுமா? இது போன்ற விஷயங்களுக்குச் சட்டத்தில் ஏதாவது சலுகைகள் உண்டா?

**பதில்:** ஒரு சட்டத்தை ஏமாற்றியதால் வேருெரு சட்டம் பிடித்துக் கொண்டுவிட்டது. இரண்டையும் ஏமாற்ற முடியாது. வாகன் வேண்டுமென்று ரயில்வே நிர்வாகத்துக்கு மனுப் போடும்போது சொந்தச் சரக்கை ஒரு 'வியாபாரி' அனுப்புவதுபோல் தாங்கள் எழுதியிருப்பதை விற்பனை வரி அதிகாரிகள் உண்மை என்று வைத்துக்கொண்டு வரி விதிக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

**கேள்வி:** (L 3341 - நத்தர் சாயபு-கீரனூர்) முஸ்லீம் ஏக குடும்பத்தில் தகப்பனர் தம் பெயரால் ஒரு வியாபாரம் நடத்தி வருகிருர். அவரே தம் மகன் பெயரால் விலாசம் வைத்துத் தனியாக வேறு ஒரு வியாபாரமும் நடத்தி வருகிருர். இந்த இரண்டு வியாபாரங்களிலும் ஒவ்வொன்றிலும் ரூ. 2000 லாபம் கிடைக்கிறதென்ருல், ஷை தொழில்களுக்கு வருமானவரி இல்லையா? அல்லது இரண்டு வியாபாரங்களின் மொத்த லாபத்தையும் ஒன்று சேர்த்து ரூ. 4000 என்று கணக்குச் செய்து வருமானவரி விதிப்பார்களா?

**பதில்:** முஸ்லீம் சட்டப்படி 'ஏககுடும்பம்' 'குடும்பச்சொத்து' 'குடும்பத்தொழில்' என்பது கிடையாது. ஒவ்வொருவருக்கும் உள்ள சொத்து அவருடையதே. ஒரு வியாபாரத்தின் விலாசம் மட்டில் மகன் பெயரால் இருந்தாலும் இரண்டு வியாபாரங்களும் தகப்பனுக்கே சொந்தமாகையால், இரண்டு வியாபாரங்களிலும் கிடைக்கும் லாபங்களையும் சேர்த்து மொத்த லாபத்திற்கே வருமான வரி விதிக்கப்படும்.

**கேள்வி:** (L 3353 - உழவன் - கொடுமுடி) ஒருவருடைய மரத்தின் கிளை மற்ருெருவரின் விவசாய நிலத்தில் சுமார் 12 கஜம் படர்ந்து ஷை நிலத்தில் விவசாயம் செய்யத் தடை ஏற்படும்போது மரத்தின் சொந்தக்காரர் அதை அகற்ற மறுத்தால் பாதிக்கப்படுபவர் அக்கிளையை

வெட்டுவது குற்றமா? குற்றமானல் வேறு எவ் வழியில் அத்தடையை அகற்றுவது?

**பதில்:** பாதிக்கப் படுபவரின் நிலத்திற்கு நேர் செங்குத்தாக படர்ந்திருக்கும் கிளைகளின் பாகத்தை மட்டில் நிலத்தின் சொந்தக்காரர் தாமே அகற்றிவிட உரிமை உண்டு.

**கேள்வி:** (L 3366 — நாராயண ராவ், உசிலம்பட்டி) ஒரு வீட்டில் குடியிருக்கும் குடித்தனக்காரர் (tenant) சட்டப்படி, அந்த வீட்டின் சுவான்தாருக்கு (land lord) பிரதி மாதமும் வாடகை கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமா? அல்லது வீட்டுச் சொந்தக்காரர் குடியிருப்பவரிடம் வந்து வாங்கிக் கொள்ள வேண்டுமா?

**பதில்:** வீட்டுக்காரர் வரா விட்டாலும், குடியிருப்பவர் வாடகையைக் கொடுத்துவிட வேண்டும்; அல்லது அனுப்பிவிட வேண்டும்.

**கேள்வி:** (ஷை) ஒரு ரைஸ் மில்லைப் பழைய விலை ரூ. 5000-க்குக் கிரயமாக வாங்குவதானல், கிரயப் பத்திரம் எழுதித்தான் வாங்க வேண்டுமா? அல்லது எக்ரிமெண்ட் எழுதி ரிஜிஸ்டர் செய்தால் போதுமா? எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்பு அல்லது பத்திரம் வாங்க வேண்டும்?

**பதில்:** ஜங்கம சொத்துக்களை விற்க கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்கிற அவசியமில்லை. ஆனல் 'கிரயப்பத்திரம்' என்று எழுதினல் ஸ்தாவர சொத்துக்களைப்போல் ஸ்டாம்பு வாங்கித்தான் எழுதவேண்டும். அதாவது ரூபாய் 100-க்கு ரூபாய் 3 ஸ்டாம்பு வேண்டும். ஸர்சார்ஜ் கிடையாது.

**கேள்வி:** (L 3367 - பொன்ராஜா - செக்காரக்குடி) இரண்டு (ஹிந்து) சகோதரர்கள் பாகமாகாமல் இருக்கும்போது, முதல் சகோதரர் பூராச் சொத்தையும் தகப்பன் வாங்கிய கடனுக்குச் செல்லுப்போட்டுத் தானும் பிரதிப் பிரயோஜனம் அடைந்து கிரயம் செய்து ரிஜிஸ்டர் செய்துவிடுகிறர். தம்பிக்கு யாதொன்றும் கொடுக்காமல் இருந்தால் அந்தக் கிரயம் செல்லுமா?

**பதில்:** முதல் சகோதரர் குடும்பத்தலைவராக இருந்து, தகப்பன் வாங்கிய கடனுக்காகச் சொத்தை விற்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டால், கடனைத் தீர்க்கப் போதுமான குடும்பச் சொத்துக்களை (அதாவது தம்பியின் பாகத்தையும் சேர்த்து) அவர் கிரயம் செய்ய முடியுமென்று பொதுவாகச் சொல்லலாம்.

**கேள்வி:** (L 3368 - பக்கிரிசாமி - புதுப்பள்ளி) இரண்டு கிராமங்கள் சேர்ந்து ஒரே ரிவின்யூ வட்டமாக இருக்கிறது. அதில் ஒவ்வொரு கிராமத்திலும் 1000 ஜனத்தொகைக்கு அதிகமாக இருக்கிறது. அந்த ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாக பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தலாமா?

**பதில்:** புதிய சென்னைப் பஞ்சாயத்து சட்டப்படி ஜனத்தொகை 500-க்கு மேல் இருக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்திக் கொள்ளலாம். புதிய சட்டப்படி "பஞ்சாயத்து" என்றுதான் சொல்வது. "பஞ்சாயத்து போர்டு" என்ற பெயர் மறைந்து போகும். (சென்ற மாத "வக்கீல்" இதழில் புதிய 'பஞ்சாயத்துச் சட்டம்' விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.)

**கேள்வி:** (L 3375 - முருகைய வேளாளர் - ஆலடிக்குமுளை) ஒரு ஹிந்து விவசாயி நான்கு சகோதரர்கள் மற்றொரு ஹிந்து விவசாயினிடத்தில் தங்கள் நிலங்களை 1925-ல் ரூ. 550-க்குப் போக்கியம் வைத்து, கடன் பெற்றிருக்கிறர். போக்கியம் வாங்கியவர் இறந்துவிட்டார். ஷையாரின் பேரன்கள் (வார்சுகள்) இருவர் ஷை போக்கியம் வாங்கிய சொத்தை வாய்மொழியாகப் பாகம் பிரித்து நாளது தேதி வரை அனுபவித்து வருகிறர்கள். போக்கியம் வைத்தவர்கள் போக்கிய சொத்தை மீட்க எவ்வளவு ரூபாய் கொடுத்து மீட்கவேண்டும்?

**பதில்:** போக்கியம் வாங்கியவரின் வார்சுகள் 30-9-1937-க்குப் பின்னும் 30-1-1948-க்கு முன்னும் போக்கிய சொத்தைப் பாகம் பிரித்து அனுபவித்து வந்தால், போக்கியத்தை மீட்க ஜாடா அசல் தொகையும் கட்டவேண்டும். பாகம் ஏற்பட்டது மேற்படி கெடுவிற்கு முன்போ பின்போ இருந்தால், போக்கிய அசல் தொகையில் போக்கிய தேதி முதல் வருடம் 1-க்கு 30-ல் 1-பங்கு கழியும், மீதித் தொகையை மாத்திரம் கட்டி போக்கியத்தை மீட்கலாம்.

**கேள்வி:** (L 3385-கோவில்பிள்ளை நாடார்—சிவத்தையாபுரம்) கிராமநத்தத்தில் 50 வருஷ காலமாகச் சுமார் நூறு வீடுகள் கட்டி, குடி இருந்து வருகிறார்கள். அவர்களுக்குச் சௌகரியமான ஒரு நடை பாதையை (இந்த 50 வருஷங்களாக உபயோகப்படுத்தி வந்ததை) ஒருவர் அடைத்தால், அடைப்பை நீக்க ரெவின்யூ போர்டுக்கு அதிகாரம் உண்டா? அல்லது சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டா?

**பதில்:** சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

**கேள்வி:** (L 3389 - முத்துசாமி-பூங்கலூர்) ஒருவருக்கு இரண்டு ஆண் மக்களும் இரண்டு பெண் மக்களும் உண்டு. அவருக்குப் பூர்வீகச் சொத்து ஏராளமாய் உண்டு. அவர் ஒரு சமயம் ஒரு பெண்ணுக்குத் தமது சொத்தில் 8ல் 1பாகம் தருவதாக வர்த்தமானக் கடிதம் ஒன்று எழுதி, கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார். இதற்குச் சாக்ஷி இல்லை. இப்போதைய சட்டப்படி அவருடைய சொத்தில் மகளுக்குப் பாகம் பெறும் உரிமை உண்டா? இல்லையா?

**பதில்:** இல்லை.

**கேள்வி:** (L. 3413-ஜமால்தீன்-குலசேகரபட்டினம்) முகமதிய சட்டப்படி, ஒருவர் உயிருடன் இருக்கும்போதே, அமுலுக்கு வராமல் "நான் ஆயுளுடன் இருக்கும்வரை நானே இச்சொத்திலிருந்து வரும் வருவாயை அனுபவித்து வருவேனாகவும். என் ஆயுளுக்குப்பின் அவர் சர்வ சுதந்திரத்துடன் அனுபவிக்கலாம்" என்று நன்கொடை எழுதி விட்டு, எழுதியவர் சுமார் 23 வருஷம் அனுபவித்து இறந்தபின் அந்த நன்கொடை பெற்றவருக்கு முகமதியசட்டப்படி செல்லுமா?

**பதில்:** முகமதிய சட்டப்படி இவ்வித நன்கொடை செல்லாது. (9 கல்கத்தா 138; 10 மதராஸ் 196 என்ற இரண்டு ஹைகோர்ட் தீர்ப்புகளிலும் இதே விதமான நன்கொடை செல்லாதெனை அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கிறது).

**கேள்வி:** (L 3414 - ஜெய்லானிமியா - பறங்கிப்பேட்டை) ஒரு முஸ்லீம் தம் சொத்தை ஹிந்து கோயிலுக்குத் தானபத்திர மூலமாய் எழுதி ரிஜிஸ்டர் செய்து, ஹிந்துவைத் தற்கால தர்மகர்த்தாவாக நியமித்தார். அதே முஸ்லீம் ஷை சொத்தை ஒப்புக்கொண்டு பார்த்துவர வேண்டுமென்று கேட்க மறுக்க இடமுண்டா?

**பதில்:** தான சொத்தைத் தர்மகர்த்தாவிடம் சுவாதீனம் கொடுத்த பிறகு தானம் செய்தவர் அதைத் திரும்ப வாங்க முடியாது. சொத்து சுவாதீனம் கொடுக்கப்படாமலிருந்தால் முகமதிய சட்டப்படி இந்தத் தானமே செல்லாது.

**கேள்வி:** (L 3415 - மணியம் - பட்ளர், செலாளிபாறை) வீடு பங்களாக்களில் சமையல் வேலை செய்து வரும் பட்ளர் முதலியவர்களுக்கு வேலை நேரம், விடுமுறை, சம்பளம் இவைகளை நிர்ணயம் செய்யும் சட்டம் உண்டா?

**பதில்:** இல்லை.

**கேள்வி:** (சீனிவாஸராகவன்) ஒரு இந்து தம் சுயார்ஜித சொத்துக்களில் சில ரொக்க ஐவேஜிகளைத் தம் ஒரே பெண்ணுக்கு ஸ்திரீதனமாகக்கொடுத்து, மற்றச் சொத்துக்களைத் தம் மகனுக்குவிட்டுவிட்டு இறந்தார். அப்பெண்ணுக்கு புருடன், மகன், மகள், இருக்கிறார்கள். சீதன ரொக்கத்தைக் கொண்டு சொத்துக்கள் வாங்கப்பட்டிருந்தால் சீதனம் அடைந்த பெண்ணுக்குப் பிறகு அச்சொத்துக்களுக்கு யார் வார்சு?

**பதில்:** பெண்.


தாக சாந்தி! மன இன்பம்!!

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத் பான வகைகள், விலை நயம், அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!

**பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி**

103, பெரிய தெரு, :: கும்பகோணம்.

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
## இதர சர்க்கார் அறிக்கைகள்

# சரக்கு சப்ளை விலை அவசரச் சட்டத்தின் கீழ் சர்க்கார் உத்தரவுகள்

### வியாபாரிகள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்

(1) சரக்கின் உச்சவிலை. இந்த விலைக்கு மேல் விற்கக் கூடாது. (2) ஒரு வியாபாரிக்கு விற்ருல் எவ்வளவு விற்கலாம். (3) வியாபாரி அல்லாதவருக்கு ஒரு தடவையில் எவ்வளவு விற்கலாம். (4) கடையில் விளம்பரப் படுத்தி வைக்கவேண்டிய விஷயங்கள். (5) கடையில் வைத்துக் கொள்ளவேண்டிய கணக்குகள். வாங்குபவருக்குக் கொடுக்கவேண்டிய ரசீதுகள் சர்க்காருக்கு அனுப்பவேண்டிய கணக்குகளும் அனுப்பவேண்டிய தேதியும்.

மேற்கண்ட புதிய அவசரச் சட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றனர்.

**உச்சவிலை:-** (1) சைகிள் (2) சைகிள் டயர் டியூபுகள் (3) சிசு ஆகாரம் அதாவது கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்டு கேட் பால் (4) க்ஷவர (ரேஸர்) பிளேடுகள் (5) சோடா ஆஷ், காஸ்டிக் சோடா (6) எலெக்ட்ரிக் பல்புகள் இவைகளில் வியாபாரம் செய்பவர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் அவரவர் தொழில் நடத்தும் இடங்களில் 15—6—1950 தேதியில் அச்சரக்கு என்ன விலை விற்றதோ அதற்கு மேற்பட்ட விலைக்கு விற்கக்கூடாது. (7) தோல்பதனிடும் சாமான்களில் வியாபாரம் செய்பவர்கள் அவர்கள் தருவித்த விலைக்கு 10% வரைதான் அதிகமாக வைத்து விற்கலாம்.

**ஒரு வியாபாரிக்கு விற்ருல்.-** (1) சைகிள் (2) சைகிள் டயர், டியூபுகள் (3) சிசு ஆகாரம் கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்டு கேட் (4) க்ஷவர (ரேஸர்) பிளேடுகள் (5) ஒரு டன்னுக்கு மேல் விற்கும் பித்தளை முதலிய இரும்பு சம்பந்தமில்லாத உலோகங்கள் இவைகளில் வியாபாரம் செய்பவர்கள் வேறு ஒரு வியாபாரிக்கு விற்ருல், வாங்கும் வியாபாரிக்கு சாதாரணமாய் மூன்று மாத வியாபாரத்திற்குப் போதுமான அளவுக்கு மேற்படாமல் விற்கலாம். வாங்கும் வியாபாரியிடம் இவ்விதம் எழுத்து மூலம் ஒரு உறுதிமொழி வாங்கிக்கொண்டு தான் விற்கவேண்டும்.

**வியாபாரி அல்லாதவர்களுக்கு விற்ருல்:-** (1) ஒருவருக்கு ஒரு தடவையில் கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்டு கேட் இவைகள் ஒரு டின் அல்லது ஒரு பாட்டில்தான் விற்கலாம். (2) க்ஷவர (ரேஸர்) பிளேடுகள் 5 அடங்கிய 3 பாக்கெட்டுகளுக்குமேல் ஒருவருக்கு ஒரு தடவையில் விற்கக்கூடாது.

### கடையில் விளம்பரப் படுத்தப் பட வேண்டியவை

கீழ்க்கண்ட சரக்குகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் உடனேயே எப்படியும் 10-9-1950 க்கு முன்பேயும், பிறகு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் கடையில் யாவரும் சுலபமாய்ப் பார்க்கக் கூடிய இடத்தில் வியாபாரியிடம் இருக்கும் சரக்கின் ஸ்டாக் விபரத்தையும் விலை விபரத்தையும் காட்டக் கூடிய ஒரு ஜாப்தாவை விளம்பரப் படுத்தி வைத்திருக்கவேண்டியது:- (1) சைகிள் (2) சைகிள் டயர், டியூப் (3) சிசு ஆகாரங்கள் கிளாக்ஸோ, ஹார்லிக்ஸ், கௌ அண்டு கேட் (4) தோல்பதனிடும் சரக்குகள் (5) க்ஷவர

(ரேஸர்) பிளேட் (6) சோடா ஆஷ், காஸ்டிக் சோடா (7) எலெக்ட்ரிக் பல்பு (8) இரும்பு தவிர மற்ற உலோகங்களில் (பித்தளை முதலியவை)

**'ஸ்டாக்' - கணக்கு முதலியவை :-** (1) சைகிள் (2) சைகிள் டயர் டியூப் (3) சிசு ஆகாரங்கள் (4) எலெக்ட்ரிக் பல்புகள் (5) 5 டன்னுக்கு மேல் இரும்பு சம்பந்தமில்லாத உலோகங்களை (பித்தளை முதலியவை வைத்திருப்பவர்கள்) —இவர்கள் தம்மிடம் 1—9—1950ல் இருந்த ஸ்டாக் எவ்வளவு என்று 15—9—1950க்குள் இந்தியா கவர்ன்மெண்ட் காரியதரிசிக்கு (Secretary to the Government of India, Ministry of Industry and Supply, New Delhi) ஒரு ஸ்டேட்மெண்ட் அனுப்பவேண்டும். இதன் நகல் ராஜ்ய சர்க்காருக்கு அனுப்ப வேண்டும். தோல் பதனிடும் சரக்கு வியாபாரிகளும் சோடா ஆஷ், காஸ்டிக் சோடா வியாபாரிகளும் மேற்கண்ட கணக்கை டைரக்டர் ஜெனரல் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு சப்ளைஸ், புது டில்லி என்ற அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

தவிர (1) சைகிள் (2) சைகிள் டயர் டியூப் (3) இரும்பு தவிர பித்தளை முதலிய உலோகங்களில் வியாபாரம் செய்பவர்கள் அவர்கள் செய்யும் விற்பனை சம்பந்தமாய் வாங்குபவர் பெயர், விலாசம் அளவு இவைகளைக் காட்டக் கூடிய கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். பல்புகள் வியாபாரம் செய்பவர்கள் ஒரு தடவையில் 12 பல்புகளுக்கு மேல் விற்றால் மேற்கண்ட விவரப்படி கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

சொந்த உபயோகத்திற்காக சோடா ஆஷ், காஸ்டிக் சோடா இவைகளை வாங்கிய வியாபாரி உற்பத்தியாளர் அல்லாத எவரும் புது டில்லியிலிருக்கும் டைரெக்டர் ஜெனரல் ஆப் இண்டஸ்ட்ரீஸ் என்ற அதிகாரியின் அனுமதி அன்னியில் இவைகளை விற்கக் கூடாது.

**ரொக்க பில் :-** சரக்கு வாங்குபவர்களுக்கு வியாபாரிகள் கொடுக்கும் ரொக்கபில்லில் வாங்குபவர் பெயர், விலாசம், வாங்கும் அளவு இவை விவரமாகக் கண்டிருக்கவேண்டும்.

(2—9—1950 இந்தியா கெஜட் விசேஷ வெளியீடு-பாகம் II செக்ஷன் 3, பக்கம் 581)

## புதிய அவசரச் சட்டத்தின் கீழ் சில அதிகாரிகளும் அவரவர்கள் அதிகாரங்களும்.

1950 ஆம் வருடத்திய சரக்கு விநியோக—விலை நிர்ணய அவசரச் சட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார், கீழ்க்கண்ட அதிகாரிகளுக்கு சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கின்றனர். அதாவது:—

**சோதனை போட :**—இச்சட்டத்தை அமுல் நடத்த எந்த இடங்களிலும் போய் பார்க்கவும், வண்டி, கப்பல், படகு, ஆகாய விமானங்கள் முதலிய சரக்குகள் வைக்கப் பட்டிருக்கும் எவ்விதமான இடங்களில் சோதனை செய்யவும், குற்றம் சம்பந்தப்பட்ட பண்டங்களைக் கைப்பற்றவும், அவைகளைக் கோர்ட்டில் ஆஜர் செய்ய வேண்டியது சம்பந்தமான காரியங்களைச் செய்யவும் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லா சப்ளை ஆபீசர்களுக்கும், எல்லா தாலுக்கா சப்ளை ஆபீசர்களுக்கும், மூன்றாவது கிரேடுக்குக் குறையாத எல்லா ரேஷனிங் ஆபீசர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

## சரக்கை யாருக்கு விற்கவேண்டுமென்று உத்தரவிட அதிகாரம்.

சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கும், எல்லா ஜில்லா கலெக்டர்களுக்கும், ஒரு உற்பத்தியாளர் அல்லது வியாபாரி அல்லது வேறு எவரிடமும் உள்ள சரக்கு ஜாடாவையுமோ ஒரு பாகத்தையோ, உத்தரவில் குறிப்பிடும் நபர்களுக்கு அதில் கண்ட விலைக்கு விற்கவேண்டுமென்று கட்டாயப் படுத்த அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

(11-9-1950—இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு-பாகம் II செக்ஷன் 3, பக்கம் 606)

## கிரிமினல் வழக்குத் தொடர "சாங்ஷன்" கொடுக்கும் அதிகாரிகள்.

1950 ஆம் வருடத்திய சரக்கு விநியோக, விலை நிர்ணய அவசரச் சட்டத்தை மீறுபவர் மீது கோர்ட்டில் கிரிமினல் வழக்குத் தொடரும் படி அனுமதி கொடுக்க (to sanction prosecution) கீழ்க்கண்ட அதிகாரிகளுக்கு மத்திய

சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது சென்னை ராஜ்யத்தில் அவரவர் அதிகார எல்லைக்குள் அந்தந்த ஜில்லா கலெக்டர்களுக்கும், சென்னை நகரில் சிவில் சப்ளைஸ் டைரெக்டர், சிவில் சப்ளை டிப்டி கமிஷனர் இவர்கள் அனுமதியின் பேரில் தான் கிரிமினல் வழக்குகள் தொடரப்பட வேண்டும்.

(11-9-1950—இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு—பாகம் II செக்ஷன் 3, பக்கம் 606)

## ஜில்லா கலெக்டர்களும், சிவில் சப்ளை கமிஷனரும், சர்க்கரை, வெல்லம் இவைகளின் "விலை நிர்ணயம்" செய்யலாம்.

1946 ஆம் வருஷத்திய 24 ஆவது மத்திய சட்டத்தின் (அத்தியாவசியமான பொருள்களைப் பற்றிய தாற்காலிக அதிகாரச் சட்டத்தின்) 3, 4 செக்ஷன்களை அனுசரித்து, சென்னை ராஜ்யத்தில் சர்க்கரை வெல்லம் இவைகளின் விலையை நிர்ணயம் செய்ய சென்னை சிவில் சப்ளை கமிஷனருக்கும், சென்னை ராஜ்யத்திலுள்ள ஜில்லா கலெக்டர்களுக்கும் மத்திய சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் சென்னை ராஜ்ய சர்க்காரின் உத்தரவுகளை அனுசரித்து இவர்கள் விலை நிர்ணயம் செய்யலாம்.

(7—9—1950 விசேஷ இந்தியா கெஜட்—பாகம் II செக்ஷன் 3, பக்கம் 595)

[குறிப்பு:—சமீபத்தில் (4—8—1950ல்) சென்னை ஹைகோர்ட்டில் கனம் நீதிபதி கோவிந்த மேனன் அவர்களால் ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. 1946 ஆம் வருடத்திய 24 ஆவது மத்திய சட்டப்படி சில பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்ய மத்திய சர்க்காரால் சென்னை ராஜ்ய சர்க்காருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, சென்னை சர்க்காரே நேரில் உபயோகித்தால்தான் செல்லுமென்றும்; சென்னை சர்க்கார் அந்த அதிகாரத்தை மறுபடியும் ஜில்லா கலெக்டர்களுக்கு மாற்றியது செல்லாதென்றும் அவ்வழக்கில் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டார். ஜில்லா கலெக்டரால் நிர்ணயம் செய்யப்பட்டு ஜில்லா கெஜட்டில் பிரசுரமான விலைக்கு மேல் சர்க்கரை விற்ற ஒரு வியாபாரியின் மீது தொடரப்பட்ட கிரிமினல் வழக்கு ரத்து செய்யப்பட்டது. இப்பொழுது மத்திய சர்க்கார் ஜில்லா கலெக்டர்களுக்கே நேரில் "விலை நிர்ணய" அதிகாரத்தைக் கொடுத்திருப்பதால் இனி ஜில்லா கலெக்டர்களால் நிர்ணயம் செய்யப்படும் சர்க்கரை வெல்லம் முதலியவற்றின் விலை சட்ட பூர்வமானதே.]

நெய்: நெய் விலை, விநியோகம் போக்குவரத்து சம்பந்தமாயும் ஒரு இடத்திலிருந்து வேறு இடங்களுக்குக் கொண்டு போவதைப் பற்றிய நிபந்தனைகள் சம்பந்தமாயும் எந்த ராஜ்ய சர்க்கார்களால் எவ்விதமான கண்ட்ரோல் உத்தரவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவைகளை எல்லாம் 9—9—1950 தேதியிலிருந்து மத்திய சர்க்கார் ரத்து செய்துவிட்டனர்.

(9—9—1950 இந்தியா கெஜட்—பாகம் II செக்ஷன் 3, பக்கம் 586).

## நிலக் கடலை, மிளகாய், ராகியுடன் பருத்தி சாகுபடியை வற்புறுத்தலாம்.

குறிப்பிட்ட இடங்களில், நிலக்கடலை மிளகாய், ராகி இவைகளை சாகுபடி செய்பவர்கள் கட்டாயமாக பருத்தியும் குறிப்பிடப்படும் வீதாசார அளவில் பயிர் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த சென்னை சர்க்காருக்கு (மத்திய சர்க்காரால்) அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(9—9—1950 இந்தியா கெஜட்—பாகம் II செக்ஷன் 3, பக்கம் 584)

## சென்னை கட்டாய நிலசாகுபடி உத்தரவு.

(Madras Land Utilization order 1950—19—9—1950 ல் அமுலுக்கு வந்துவிட்டது.)

கண்ட்ரோல் சட்டத்தின்கீழ் சென்னை சர்க்கார் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றனர். இது சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும். இவ்வுத்தரவின்படி ஒருவருக்குச் சொந்தமான நிலத்தைச் சாகுபடி செய்யாமல் தரிசு போட்டிருந்தால், அதில் உணவுப் பயிர் சாகுபடி செய்யப்பட வேண்டுமென்று ஜில்லா

கலெக்டர் உத்தரவு செய்யலாம். அந்த உத்தரவில் நிலத்தின் சொந்தக்காரர் நேரிலோ, குத்தகைதார் மூலமாகவோ, நோட்டீஸ்கிடைத்த மூன்று மாதங்களுக்குள் அவ்விதம் உணவுப் பயிர் சாகுபடி செய்யப்பட வேண்டுமென்று காணப்பட்டிருக்கும். அந்த நிலம் ஏற்கனவேயே குத்தகைதார் வசமிருந்தால் மேற்கண்டபடி நோட்டீஸ் நிலக்காரருக்கும் கொடுக்கப்படும்; குத்தகைதாருக்கும் கொடுக்கப்படும். மூன்று மாத கெடுவை நீடிக்கவும் ஜில்லா கலெக்டருக்கு அதிகாரமுண்டு. பொதுமக்களின் உபயோகத்திற்காக என்று முன்வருஷத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலங்களைப்பற்றி இவ்விதம் நோட்டீஸ் கொடுக்கப் படமாட்டாது.

நோட்டீஸ் கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் நிலக்காரரோ குத்தகைதாரோ நோட்டீஸில் கண்ட நிலம்சாகுபடி செய்யவே லாயக்கில்லை என்றாவது, அல்லது சாகுபடி செய்யப்பட்டுத்தான் வருகிறதென்றாவது எடுத்துக்காட்டினால் நோட்டீசை ரத்து செய்யவும் கலெக்டருக்கு அதிகாரமுண்டு. மேலும் நிலத்தின் சொந்தக்காரர் நோட்டீசில் கண்ட நிலம் தன்னால் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதென்று ருசுப்பித்தால் அவர் சம்பந்தப்பட்ட வரையில் கலெக்டர் நோட்டீசை ரத்து செய்யலாம்.

நோட்டீசில் கண்ட கெடுவுக்குள் நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்படாவிட்டால் அந்நிலத்தை சர்க்காரே குத்தகைக்குவிட கலெக்டர் உத்தரவிடுவார். குத்தகை பாத்தியம் பகிரங்கமான ஏலத்தில் விடப்படும். குத்தகை கெடு சாதாரணமாய் மூன்று வருடங்களாக இருக்கும். மேலும் குத்தகை கெடு ஜூன் 30 தேதியோடு முடியும். குத்தகை ஏலத்தில் கிடைத்த குத்தகைத் தொகையிலிருந்து சர்க்கார் கிஸ்தி முதலியவற்றை எடுத்துக் கொண்டு பாக்கித் தொகை சாகுபடி செய்யத் தவறிய நிலக்காரருக்கோ குத்தகைதாருக்கோ நஷ்டஈடாகக் கொடுக்கப்படும். குத்தகையில் ஏலம் எடுத்தவரும் உணவுப்பயிர்தான் சாகுபடி செய்யலாம். அப்படி அவர் செய்யாவிட்டால் அவருடைய குத்தகை கெடு பாக்கி இருந்தாலும் குத்தகைப் பாத்தியம் ரத்து செய்யப்படும். இதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு ஏலமெடுத்தவரே ஜவாப்தாரி ஆவார்.

இது கண்ட்ரோல் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட உத்தரவாதலால் சாகுபடி செய்யும்படி பிறப்பித்த உத்தரவுப்படி நடக்கத்தவறுவதும் குற்றமாகும். கலெக்டருடைய உத்தரவுகளை மாற்ற சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

இந்த உத்தரவில் "உணவுப் பயிர்" என்றால், நெல், மற்ற தானியங்கள், கடலை, உளுந்து, துவரை, பயறு, நவதானிய வகை, காய்கறி முதலியவற்றையும் சர்க்காரால் குறிப்பிடப்படும் மற்ற எவ்விதப் பயிர்களையும் குறிக்கும்.

(19—9—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II, ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 130)

## ஷாப் சட்டம்

தீபாவளிப் பண்டிகைக்காக 26—10—1950 முதல் 9—11—1950 முடிய 15 தினங்களுக்கு சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லாக் கடைகளுக்கும் ஷாப் சட்டம் செக்ஷன் 11 (1) விதியிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது வாரத்தில் ஒரு தினம் கடைகள் மூடப்படவேண்டுமென்ற விதி கிடையாது.

(19—9—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II, பக்கம் 1239)

## வனஸ்பதி

வனஸ்பதி கண்ட்ரோலரால் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது :-(1) வனஸ்பதியில், தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதி உண்டாக்கக் கூடிய 'கலர்,' வாசனை முதலிய எவ்வித சரக்கும் சேர்க்கக்கூடாது. (2) வனஸ்பதியில், நெய்யைப் போல் தோற்றமளிக்கக் கூடிய 'கலர்' சேர்க்கக்கூடாது; வேறு எவ்வித 'கலர்' சேர்க்கவும் வனஸ்பதி கண்ட்ரோலருடைய அனுமதி வேண்டும். (3) வனஸ்பதியில், வாசனை சேர்க்கவேண்டுமானால் 'நெய்' போன்ற வாசனையைச் சேர்க்கக்கூடாது; மேலும் வனஸ்பதி கண்ட்ரோலரால்நிர்ணயிக்கப்படும் ஜாப்தாவில் உள்ள வாசனையை அனுமதிக்கப்பட்ட அளவுக்குத்தான் சேர்க்கலாம்.

குறிப்பு: இதற்கு மாறாக இருக்கும் வனஸ்பதியை எவரும் உற்பத்தி செய்வதும்,

ஸ்டாக் செய்வதும், விற்பனை செய்வதும் வனஸ்பதி கண்ட்ரோல் ஆர்டர் 4 [1] ஆவது கிளாஸின்படி குற்றமாகும்.)

(29—7—1950 இந்தியா கெஜட் விசேஷ வெளியீடு—பாகம் 2, செக்ஷன் 3, பக்கம் 156)

## வனஸ்பதி விலை நிர்ணயம்

1947 ஆம் வருடத்திய வனஸ்பதி கட்டுப்பாடுச் சட்டப்படி 1—9—1950 முதல் வனஸ்பதியின் உச்ச விலை கீழ்க் கண்டபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சென்னை சம்பந்தப்பட்ட வரையில் (Zone B):— (1) உற்பத்தியாளர் அல்லது அவருடைய விநியோக ஏஜெண்டால் செய்யப்படும் விற்பனையில் பவுண்டு 1க்கு உச்ச விலை ரூ. 1-1-0. (2) மற்ற வியாபாரிகள் பெரிய அளவில் செய்யும் விற்பனையில் பவுண்டு 1 க்கு உச்ச விலை ரூ. 1-1-9. (3) சில்லறை விற்பனையில் பவுண்டு 1-க்கு உச்ச விலை ரூ. 1-2-6.

சிறிய டின்களில் விற்கப்படும் வனஸ்பதியின் உச்ச விலை (சென்னை ராஜ்யத்தில்)

37701

| | மொத்த வியாபாரத்தில் | சில்லரை வியாபாரத்தில் |
|---|---|---|
| 10 பவுண்டு டின் | 11—9—0 | 11—14—0 |
| 9 ... | 10—6—6 | 10—11—0 |
| 5 ... | 6—0—3 | 6—2—0 |
| 3 ... | 3-10—6 | 3—12—0 |
| 2 ... | 2—7—0 | 2—8—0 |
| 1 ... | 1—3—9 | 1—4—3 |

**குறிப்பு.** மேற்கண்டவிலை ரயில் வண்டிச் சத்தம் அடங்கியவை. ஆனல் ஆக்ட்ராய், டர்மினல் வரி, ஸ்தல வரி, விற்பனை வரி இவைகள் சேர்ந்ததல்ல. விற்பனை செய்யும்போது இந்த வரிகளை மட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.

(1—9—1950 இந்தியா விசேஷ கெஜட்—பாகம் II, செக்ஷன் 3, பக்கம் 577)

## கொண்டைக் கடலை கண்ட்ரோல் ரத்து

கொண்டைக் கடலை, கடலைச் சரக்கு இவை சம்பந்தப்பட்ட வரையில் கீழ்க்கண்ட கட்டுப்பாடு உத்தரவுகள் சென்னை சர்க்காரால் ரத்து செய்யப்பட்டன. ரத்தான கட்டுப்பாடு உத்தரவுகளின் விபரம்:— (1) பர்மிட் இல்லாமல் இத் தானியத்தைச் சென்னை ராஜ்யத்தில் சில இடங்களுக்கு எடுத்துப் போவதைத் தடுக்கும் உத்தரவு. 29-6-1948 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான உத்தரவு. (2) 1947 ஆம் வருடத்திய சென்னை உணவுதானியக் கட்டுப்பாடு உத்தரவு. 30-9-1947 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (3) 1947 ஆம் வருடத்திய சென்னை மாவுப்பசை கட்டுப்பாடு உத்தரவு. 7-1-1947 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (4) 1947 ஆம் வருடத்திய சென்னை உணவு தானியப் போக்கு வரத்து கட்டுப்பாடு உத்தரவு. 24-6-1947 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (5) திருநெல்வேலி ஜில்லாவில் சில கிராமங்களிலிருந்து வெளியே கொண்டு போவதைத் தடுக்கும் உத்தரவு. 19-4-1949 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (6) இறக்குமதி செய்யப் பட்ட கடலை விநியோகம் விற்பனை இவைகளைக் கட்டுப் படுத்தும் உத்தரவு. 19-4-1949 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (7) 1949 ஆம் வருடத்திய கடலை விலைக் கட்டுப்பாடு உத்தரவு. 19-4-1949 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (8) கடலையை ஒரு ஜில்லாவிலிருந்து வேறு ஜில்லாவுக்குக் கொண்டுபோக ஜில்லா கலெக்டருடைய பர்மிட் வேண்டுமென்று வற்புறுத்தும் உத்தரவு. 19-4-1949 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது. (9) சென்னை ராஜ்யத்தில் விளையும் கடலை விலை கட்டுப்பாடு உத்தரவு. 4-4-1950 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமானது.

(22—8—1950 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II— பக்கம் 1096)

## கொண்டைக் கடலை விலை நிர்ணயம்

மத்திய சர்க்கார் உத்தரவு:- இந்தியாவின் ஒவ்வொரு ராஜ்யத்திலும் கடலையை எந்த விலைக்கு மேல் விற்கவும் வாங்கவும் கூடாதென்று மத்திய சர்க்காரால் "உச்ச விலை" நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வுத்தரவின்படி சென்னை ராஜ்யத்தில் ஒரு இம்பீரியல் மணங்கு, அதாவது $82\frac{2}{7}$ பவுண்டு நிறையுள்ள கடலையின் உச்ச விலை ரூ. 16 க்குமேல் ஒருவரும் கடலையை விற்கவும் வாங்கவும் கூடாது.

(17—8—1950 இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு—பாகம் II, செக்ஷன் 3—பக்கம் 498)

PRINTED BY N. RAMARATNAM, MA, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUPUVANAM, TIRUVADAMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.